# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:15 வள்ளுவர்ஆண்டு2030 கார்த்திகை 22 புதன்கிழமை (08-12-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்:10


## சந்திரசேகரன் தமது பதவியை ராஜினாமாச் செய்தார்

கொழும்பு, டிசெ 8

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தோட்டப் பகுதி வீடமைப்புப் பிரதி அமைச்சருமான எஸ் சந்திரசேகரன் தமது பிரதி அமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

இது தொடர்பான கடிதத்தை நேற்று மாலை அவர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

பதவியை ராஜினாமாச் செய்வது தொடர்பாக அவர் நேற்றுச் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அவசர காலச் சட்டத்துக்கு எதிராக ஈ.பி.டி.பியின் 2 எம்.பிக்கள் வாக்களிப்பு

கொழும்பு, டிசெ 8

ஈழ மக்கள் ஜனநாயக முன்னணியைச் (ஈ.பி.டி.பி) சேர்ந்த இரண்டு உறுப்பினர்கள் அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பதற்கான பிரேரணைக்கு எதிராக நேற்று வாக்களித்தனர்.

பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அநுருத்த ரத்வத்தவினால் நேற்றுக்காலை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இந்தப் பிரேரணை மீதான விவாதம் முடிவடைந்து மாலையில் வாக்களிப்பு இடம் பெற்றது.

ஈ.பி.டி.பியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான எம். சந்திரகுமாரும், எஸ். வி. தங்கவேலும் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தனர்.

பிரேரணைக்கு எதிராக தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த 4 உறுப்பினர்களும், ரெலோ ஜே. வி. பி. ஆகியவற்றின் ஒவ்வொரு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## — வடக்கு — கிழக்கிற்கு —

# சிவில் இணைப்பாளர்களாக ஐந்து படை அதிகாரிகள்!

### அகதிகள் நலன்களை கவனிக்க

கொழும்பு, டிசெம்பர் 8

வடக்கு — கிழக்கின் ஐந்து மாவட்டங்களில் இடம் பெயர்ந்தோருக்கான சிவில் நிர்வாகப் பணிகளை விசேடமாக மேற்கொள்ளவென ஐந்து படை அதிகாரிகளை இணைப்பதிகாரிகளாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியமித்துள்ளார்.

அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் இந்த நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன.

விசேட வர்த்தமானி மூலம் இந்த நியமனங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இது பற்றிய விவரம் கடந்த 2 ஆம் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

நியமனம் பெற்றுள்ள இணைப்பதிகாரிகளின் விவ

[10 ஆம் பக்கம் பார்க்க]

## வாக்காளர் அட்டைகள் விநியோகம்

யாழ்ப்பாணம், டிசெ. 8

யாழ் குடாநாட்டிலுள்ள வாக்காளர்களின் வாக்காளர் அட்டைகள் யாவும் இன்று தொடக்கம் விநியோகிக்கப்படும் எனத் தபால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

நாட்டின் ஏனைய பகுதிகளில் இந்த விநியோகம் ஏற்கனவே ஆரம்பமாகியுள்ளது.

(ஐ-10)

## நாடாளுமன்றை கலைப்பதான செய்திகளுக்கு அரசு மறுப்பு

கொழும்பு, டிசெ. 8

நாடாளுமன்றம் இவ்வாரம் கலைக்கப்படலாம் என்று சில கொழும்புப் பத்திரிகைகளிலும் செய்தி ஊடகங்களிலும் வெளியான தகவல்களை அரசு அடியோடு மறுத்துள்ளது.

இத்தகைய பிரசாரங்களில் எவ்வித உண்மையும் கிடையாது என்று தகவல் தொடர்பு சாதன அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியினரே திட்டமிட்டு இவ்வாறு பொய்ப் பிரசாரத்தை மேற்கொண்டு வருவதாகவும் அவர் குற்றஞ் சாட்டினார்.

எதிர்வரும் வெள்ளியன்று நள்ளிரவில் நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட அரசு திட்டமிட்டிருப்பதாக 'திவயின' பத்திரிகை நேற்றுச் செய்தி வெளியிட்டிருந்தது.

சில செய்தி நிறுவனங்களிலும் இந்தத் தகவல் வெளியாகி இருந்தது.

[ஐ-க-கி]

## வன்னிக்கு பாதை திறக்க வசதியாக கண்ணிவெடி அகற்றும்பணி ஆரம்பம்

### அரச தரப்பில் அறிவிப்பு

வவுனியா, டிசெ. 8

வன்னியில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்துக்கும் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்துக்கும் இடையில் பிரமனாலங்குளம் — பெரியதம்பனை — மடு ஊடாகத் தரைவழிப் பாதை ஒன்றை திறக்க இணக்கம் ஏற்பட்டுள்ளதை அடுத்து கண்ணிவெடிகளை அகற்றும் பணியை இரு தரப்பினரும் ஆரம்பித்துள்ளதாக அரச தரப்பில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

படையினரின் முன்னரங்க நிலையான பிரமனாலங்

( 9 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் பணிக்கு வாகனங்கள் 'லங்கா முடித்தவில்' யாழ். வரும்

யாழ்ப்பாணம், டிசெ. 8

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தல் பணிகளில் ஈடுபடுத்துவதற்காக யாழ்ப்பாணத்துக்கு பஸ்கள் மற்றும் வாகனங்கள் எடுத்து வரப்படவுள்ளன.

ஓரிரு தினங்களில் காங்கேசன்துறை வரும் 'லங்கா முடித்த' கப்பலில் இவை எடுத்து வரப்படவிருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

வாகனங்களை இறக்கிய பின்னர் அந்தக் கப்பல் திருகோணமலைக்குச் சென்று ஒரு தொகுதி பயணிகளை ஏற்றிவரும் என்றும்—

அதன் பின்னர் இங்கிருந்து ஒரு தொகுதிப் பயணிகள் திருமலைக்கு ஏற்றிச் செல்லப்படுவர் என்றும் — மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## ஈ. பி. ஆர்.எல்.எவ். கட்சிக்குள் பிளவு:

# பெருமாளை இடை நிறுத்தியதற்கு யாழ். அணியினர் கடும்எதிர்ப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 8

ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பில் இருந்து வரதராஜப் பெருமாளை இடைநிறுத்துவதாக அதன் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் விடுத்த அறிவிப்பை ஆட்சேபித்தும், கண்டித்தும் அந்த அமைப்பின் யாழ். பிராந்தியப் பிரிவினர் அறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டனர்.

கட்சி உறுப்பினர்களைக் கூடி ஆராயாமல்— அனைத்துத் தோழர்களையும் பிரதிநிதித்துவப் படுத்தும் கட்சிக் காங்கிரஸைக் கூட்டாமல் — சுரேஷ் பிரேமச்சந்திரன் ஒருதலைப்பட்சமாக இந்த முடிவை எடுத்திருப்பதாக அவர்கள் குற்றஞ்சாட்டி உள்ளனர்.

இது தொடர்பாக ஈ.பி. ஆர். எல். எவ். அமைப்பின் யாழ். பிராந்தியச் செயலாளர் கே. எஸ். மோகன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

(9 ஆம் பக்கம் பார்க்க)

## ஆர்ப்பாட்டம்

ஐ. தே. கவின் ஆட்சிக் காலத்தில் நாட்டில் இடம் பெற்ற வன்செயல்களைக் கண்டிக்கும் வகையில் அரச நாடாளுமன்ற உறுப்பினர்

[10 ஆம் பக்கம் பார்க்க]

## குடாநாட்டில் மற்றொரு எய்ட்ஸ் நோயாளி

யாழ்ப்பாணம், டிசெ. 8

குடாநாட்டில் எய்ட்ஸ் நோய் அறிகுறிகளுடன் மற்றொரு நோயாளி இனங் காணப்பட்டிருக்கிறார்.

நீண்டகாலமாக சுகவீனமடைந்திருந்த 85 வயதான பெண் ஒருவரே யாழ். ஆஸ்பத்திரியில் மேற்கொள்ளப்

[10 ஆம் பக்கம் பார்க்க]

### நேற்று ஆரம்பமான

## தபால் மூல வாக்களிப்பு குடாநாட்டில் மந்தம்

யாழ்ப்பாணம், டிசெ. 8

ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நேற்று ஆரம்பமாகியது.

யாழ் மாவட்டத்தில் உள்ள சகல அரச திணைக்களங்களிலும் தபால் மூல வாக்களிப்பு நேற்று ஆரம்பமான போதும் பெரும்பாலான திணைக்களங்களில் குறைந்த எண்ணிக்கையினரே தமது வாக்குகளை அளித்ததாக அறியமுடிந்தது.

இன்றும், நாளையும் தபால் மூல வாக்களிப்பு தொடர்ந்து இடம்பெறும்.

இந்தத் தேர்தலில் 2லட்சத்து 17 ஆயிரம் பேர் தபால் மூலம் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

(ஐ-க7-7:51)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேள்வி கோரல்

### தேசிய
### நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை,
யாழ். பிராந்தியம்.

மேற்படி தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு 2000 ஆம் ஆண்டுக்கான வாகனம் வாடகைக்கு அமர்த்துவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வாகனம் ஹஎஸ் (HICE) வான் நால்வர் கொண்ட இருக்கையுடன் பொருள்கள் ஏற்றிச் செல்வதற்கும் உகந்ததாக இருத்தல் வேண்டும் அல்லது (ELF) ஈஎல்எவ் லொறி. விவரங்களுக்கு முகாமையாளர், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, 45/4, நாயன்மார் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். அவர்களுடன் காரியாலயத்தில் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக் கொள்ளவும்.

முடிவு திகதி:- 24 - 12 - 99

முகாமையாளர்
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை,
யாழ்ப்பாணம்.

[சி/10133]


## மரண அறிவித்தல்கள்

### திருமதி அமுதமலர் ஆறுமுகம்

''மணிமேகலை'' 7 ஆம் கட்டை மல்லாகத்தைச் சேர்ந்த திருமதி அமுதமலர் ஆறுமுகம் கொழும்பில் சிவபதமடைந்து விட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (8-12-99) புதன்கிழமை காலை 9.30 மணியளவில் அன்னாரின் வத்தளை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பகல் ஒரு மணியளவில் கனத்தை இந்து மயானத்துக்கு தனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
சிறிநடனசோதி
(மகன்)

33/1, கல்யாணி ஒழுங்கை,
வத்தளை.

(சி/10129)

### திருமதி கனகமணி இராசரெத்தினம்

புளியங் கூடல் தெற்கைப் பிறப்பிடமாகவும் செட்டித்தெரு நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகமணி இராசரெத்தினம் 07-12-99 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் கா. இராசரெத்தினத்தின் V.K.R) அன்பு மனைவியும் காலஞ் சென்ற கணபதிப்பிள்ளை சிவபாக்கியம், நவரெத்தினம் (கனடா), துரைச்சாமி, காலஞ்சென்ற மகாலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் லதா, குமாரி, நேசன் (சுவிஸ்), கீதா, வாசு, சுதா, (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சந்திரன் (அபிராமி மில், கொட்டடி), இந்திரன், இராஜேஸ்வரன் (நதியா நகை மாடம்), விக்கினேஸ்வரன் (லண்டன்), சந்திரிக்கா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், துசாயினி, தனு, அபி, சயந்தன் சகிந்தன், கௌசன், நதியா, சபிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08-12-99) புதன்கிழமை பகல் 12.00 மணிக்கு நடைபெற்று செம்மணி மயானத்துக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
இராசரெத்தினம் (V.K.R)
(கணவர்)

51/4, செட்டித்தெரு,
நல்லூர்

(71607)

### வல்லிபுரம் செல்லத்துரை

(ஓய்வு பெற்ற பொலீஸ் சார்ஜன்ட்)

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் நல்லூர் கோயில் வீதியை வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் செல்லத்துரை நேற்று முன்தினம் 6 — 12 — 99 திங்கட்கிழமை கொழும்பில் இறைபதமடைந்தார்.

அன்னார் சாவகச்சேரி வல்லிபுரம் பர்வதம் (அம்மாக்குட்டி) தம்பதிகளின் மகனும், வேலணை மேற்கு பிரமநாயகம்பிள்ளை - மரகதம் தம்பதிகளின் மருமகனும் பாக்கியலட்சுமியின் அன்புக் கணவரும், செல்வகுமாரி (கொழும்பு), ஜீவகுமாரி (பிரான்ஸ்), சுகுமாரி (U K), பிரேம்குமார் (கொழும்பு), ராஜ்குமார் (U K) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தர்மரட்ணம், ஜெயரூபலிங்கம், கோமதி ஆகியோரின் மாமனாரும் நிவேதா, லவன், யோகிதா, ஜெயந்தா ஆகியோரின் அருமைப்பாட்டனாரும் சாவகச்சேரி இராசையா, காலஞ்சென்ற செல்லம்மா, இராமலிங்கம், தர்மலிங்கம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 8 - 12 - 99 புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு பொரளை ஜெயரத்தின மண்டபத்தில் நடைபெற்று பூதவுடல் கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
நா. துரைசிங்கம்
(காசியர் - சகலன்)
84/6, தபாற் கந்தோர் -ஒழுங்கை,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

50, முகாந்திரம் லேன்,
கொள்பிற்றி,
கொழும்பு - 3
T.P. 337820
(71620)

# காணாமற்போனோர் சம்பந்தமான விசாரணைகள் முடிவடையவில்லை

## அரச சட்டத்தரணி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 8

குடாநாட்டில் கைதாகிக் காணாமற்போனோர் தொடர்பாக இன்னமும் விசாரணைகள் முடியவில்லை. நாம்மேற்கொண்டுள்ள விசாரணைகளின் முடிவிலேயே உண்மையான விவரங்கள் வெளியிடப்படும்

சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த அரச சட்டத்தரணி யசந்த கோத்தாக்கொட மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்த அவரைச் சந்தித்த காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகளிடமே அவர் இப்படிச் சொன்னார்.

பாதுகாப்பு அமைச்சுச்செயலாளர் 355 பேருக்கு காணாமற்போனோர் தொடர்பாக தகவல் தரமுடியாது என்று தெரிவித்துக் கடிதங்கள் அனுப்பியுள்ளார் என்றும்—

இதனால் மக்கள் குழப்பம் அடைந்துள்ளனர். என்றும்— சங்கப் பிரதிநிதிகள் அவரி

(9 ஆம் பக்கம் பார்க்க)


ஈசன்
கல்வி நிலையம்
கே. கே. எஸ். வீதி,
கோண்டாவில்.
DAY CLASS
வணி-
புள்ளிவிபரவியல்
திரு. தவசேகர்
[B Sc]
ஆரம்பம்: 09-12-99
(வியாழன்)
திங்கள் / வியாழன் } 2.00 p.m.
(71613)

ENGLISH
SINGING
CLASSES
ஆண்டு - 1 முதல்
5 வரையான
மாணவருக்கான
ஆங்கிலப் பாடல் வகுப்புக்கள்
8 டிசெ. 1999 முதல்
ஆரம்பம்.
நடத்துபவர்:
திருமதி
தர்ஷினி ஜெயசீலன்
இடம்:
71, றக்கா வீதி,
யாழ்ப்பாணம்.
[சி/10132]

ராஜா
யாழ்ப்பாணம்
கடைசி வாரமாக
சரத்குமார், சுகன்யா
மற்றும் பலர் நடித்த
மகாபிரபு
10-30, 2-30
10 ஆம் திகதி முதல்
காதலுக்குமரியாதை
(சி/10033)

லிபேட்டி அச்சுவேலி
இன்று மட்டும்
பிரபு - மீனா
நடித்த
மனம் விரும்புதே
உன்னை
காட்சிகள்: 10 30, 2 30
T.P.No.070-212223
070-212678
(71461)

நாகம்ஸ்
சுன்னாகம்
ரஜனி, ரோஜா
நடித்த
உழைப்பாளி
காட்சிகள்:
11.00, 2.30
(புதிய நேரம்)
(71609)


## மரண அறிவித்தல்கள்

கொக்குவில்

### துரையப்பா விஜயராஜா

(Retired Assistant Supdt. of Surveyor)

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் 241, கே. கே. எஸ். வீதி கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகக் கொண்டவருமான துரையப்பா விஜயராஜா 05-12-99 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா— காவேரியம்மாள் தம்பதியினரின் அன்புமகனும் கருணாதேவியின் அன்புக் கணவரும் மதிதரன் (பழைய மாணவன் - கொக்குவில் இந்துக் கல்லூரி, பொறியியலாளர் - பேராதனை), துவாரகேசன் (பழைய மாணவன் - கொக்குவில் இந்துக்கல்லூரி, பொறியியலாளர்- மொறட்டுவ), சாயிசங்கரி (பழைய மாணவி, கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் மீராவின் (பழைய மாணவி, வேம்படி மகளிர் கல்லூரி) அன்பு மாமனாரும் விஜேயின் அன்புப் பேரனும் காலஞ் சென்ற விஜயராணி (பத்மா), காலஞ்சென்ற விஜயரட்ணம், விஜயலட்சுமி (தங்கா - லண்டன்), சாந்தகுமாரி (பவானி -லண்டன்), வரதராஜன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் கந்தசாமியின் (சைவப் புலவர்) மைத்துனரும் சுகிர்தலட்சுமி — சுப்பிரமணியத்தின் (இளைப்பாறிய உப அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி) மருமகனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 08-12-99 புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இருந்து தகனக்கிரியைக்காக கல்கிசை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
மனைவி, மக்கள்

69/1 A, Watavappola Road,
Mt Lavinia
T P. 01 - 719217

[சி/10124]

### திருமதி மங்கையர்க்கரசி குமாரசாமி

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

23, வைமன் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக்கொண்ட மங்கையர்க்கரசி குமாரசாமி கனடாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான இந்துபோட் இராசரத்தினம் — செல்லம்மா தம்பதிகளின் புத்திரியும், கூட்டுறவு பரிசோதகர் S குமாரசாமியின மனைவியும், உதயகுமரனின் தாயாரும், கலாவின் மாமியாரும், மதுராவின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
க. மகேஸ்வரன்
(மைத்துனர்)

சரசாலை.

(71625)

### திருமதி சர்வேஸ்வரி சிவலிங்கம்

கொக்குவிலை தற்காலிக வதிவிடமாகக் கொண்ட சர்வேஸ்வரி சிவலிங்கம் நேற்று 7—12—99 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் செல்லப்பு சிவலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்லப்பா சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லப்பு அன்னலட்சுமியின் மருமகளும் ஜசீதரனின் அன்புத் தாயாரும் சுபத்திராதேவியின் அன்புச் சகோதரியும் சுபாஷினி, சுதர்சினி ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (8-12-99) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 1.00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
சி. ஜசீதரன்
(மகன்)

3 ஆம், கட்டை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(71627)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாபர் மசூதி வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட

# மூன்று அமைச்சர்கள் பதவி விலக வேண்டும்

## நாடாளுமன்றில் எதிர்க்கட்சிகள் கோரிக்கை

புதுடில்லி, டிசெ. 8

பாபர் மசூதி இடிக்கப்பட்ட வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட மூன்று மத்திய அமைச்சர்களும் உடனடியாக தமது பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும் என்று இந்திய நாடாளுமன்றில் எதிர்க்கட்சிகள் குரல் எழுப்பி உள்ளன.

இதனால் ஏற்பட்ட கூச்சல், குழப்பம் என்பன காரணமாக இரண்டாவது நாளாக நேற்றும் நாடாளுமன்றக் கூட்டத் தொடர் ஒத்தி வைக்கப்பட்டது.

பாபர் மசூதி இடிக்கப்பட்டதன் 7 ஆவது நினைவு தினமான நேற்று முன்தினம் இந்தக் கோரிக்கை காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களால் நாடாளுமன்றில் முன் வைக்கப்பட்டது. இதனை அடுத்து ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் இடையில கடும் வாக்குவாதங்கள் இடம் பெற்றன. சபையில் கடும் கூச்சல் குழப்பம் ஏற்பட்டதை அடுத்து சபாநாயகர் நாடாளுமன்றக் கூட்டத்தை ஒத்தி வைத்தார்.

மீண்டும் நேற்றுக் காலை நாடாளுமன்றம் கூடியதும் எதிர்க்கட்சியினர் மூன்று மத்திய அமைச்சர்களும் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையை மீண்டும் முன் வைத்தனர்.

கேள்வி நேரத்துக்கு பின்னர் இது தொடர்பாக ஆராயலாம் என்று சபாநாயகர் தெரிவித்தார். இதனை எதிர்க் கட்சியினர் ஏற்க வில்லை. காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி பேச எழுந்த போது கேள்வி நேரத்தில் இந்த விவாதம் குறித்து பேச முடியாது என்று ஆளும் கட்சி உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

சபாநாயகரின் கோரிக்கைகளை உறுப்பினர்கள் ஏற்காமல் நாடாளுமன்றத்தில் கூச்சல் குழப்பங்களை ஏற்படுத்திய தால்சபாநாயகர்சபையை 45 நிமிடங்களுக்கு ஒத்தி வைத்தார். [இ-6-9]

### குறோஸ்னியில் இருந்து

# பொதுமக்களை வெளியேறுமாறு ரஷ்யப் படையினர் உத்தரவு

மொஸ்கோ, டிசெ. 8

செச்சினியத் தலைநகர் குறோஸ்னியில் உள்ள பொது மக்கள் அனைவரையும் நகரை விட்டு வெளியேறிப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு ரஷ்யப் படையினர் அறிவித்துள்ளனர்.

குறோஸ்னியைவிட்டு மக்கள் வெளியேறிச் செல்வதற்கு எதிர்வரும் 11 ஆம் திகதிவரை ரஷ்யப் படையினர் கால அவகாசம் வழங்கி உள்ளனர்.

இந்தக்கால எல்லைக்குள் தலைநகரில் இருந்து வெளியேறுவதற்குப் பாதுகாப்பான பாதையைப் பயன்படுத்துமாறும் பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

தலைநகர் குறோஸ்னியை முழுமையாக முற்றுகை இட்டுள்ள நிலையில் அதனைக் கைப்பற்றுவதற்கான தாக்குதல்களை ரஷ்யப் படையினர் தீவிரப்படுத்த உள்ளனர் என்றும்—

எதிர்வரும் சனிக்கிழமை முதல் குறோஸ்னி மீதான பீரங்கித் தாக்குதல்களும் விமானத் தாக்குதல்களும் உக்கிரமடையும் என்பதால் பொதுமக்களுக்கு உயிர்ச் சேதம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காகவே பொதுமக்களை வெளியேறுமாறு படையினர் பணித்துள்ளனர் என்றும்—மொஸ்கோவில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதேசமயம்—

செச்சினிய அதிபர் அஸ்லாம் மஸ்டோ தமது இராணுவ தலைமையகத்துடன் தென்பகுதி நகரான ஷாகிலுக்கு இடம் பெயர்ந்து சென்றுள்ளதாகக் குறோஸ்னியில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

குறோஸ்னியை விட்டுப் பொதுமக்களை வெளியேறுமாறு ரஷ்யா உத்தரவிட்டுள்ளதற்கு அமெரிக்கா உட்படப் பல நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

(இ-69

# வியட்நாம் துணைப் பிரதமரை பதவி விலக்கக் கோரிக்கை

வியட் ஹொங், டிசெ. 8

வியட்நாமில் ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு இலக்காகி இருக்கும் துணைப் பிரதமரைப் பதவியில் இருந்து நீக்குவதற்கான தேசியப் பேரவையின் அனுமதியைப் பிரதமர் போன் பிராங்கொய் கோரி உள்ளார்.

1995 ஆம் ஆண்டில் வியட்நாமில் சிமெந்தின் விலை திடீரென அதிகரிக்கக் காரணமாக இருந்ததாகவும்—

ஹானோய் நில பேரத்தில் மோசடி செய்ததாகவும்—

துணைப் பிரதமர் மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இதனை அடுத்து துணைப் பிரதமரை பதவி நீக்கம் செய்வதற்கு ஆதரவாக தேசியப் பேரவை வாக்களிக்க வேண்டும் என பிரதமர் கோரி உள்ளார்.

அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்ட பின்னர் நாடு திரும்பியுள்ள பிரதமர் இந்தத் திடீர் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார். (இ-6-9)


## வெளிவந்துவிட்டது!

**A/L சேதன இரசாயனம்**

வினாத் தொகுப்பு

500-க்கும் மேற்பட்ட வினாக்கள் அடங்கியது.

தொகுப்பு:
**K. RAGAVAN** B. Sc.

கிடைக்கும் இடங்கள்:

பூபாலசிங்கம் புத்தகசாலை — யாழ்ப்பாணம்
ஈசன் கல்வி நிலையம் — கோண்டாவில்
மொஹோன் ஸ்ரோர்ஸ் — நெல்லியடி

(71663)


## இந்திய போர் விமானம் விபத்து

வடஇந்தியாவின் — சண்டிகார் விமானப் படைத்தளத்தைச் சேர்ந்த 'மிக்' ரக போர்விமானமொன்றுநேற்று முன்தினம் வீழ்ந்து நொருங்கியதில் அதில் பயணம் செய்த விமானிகள் இருவர் உயிரிழந்தனர். (ஐ-7)

## மேலும் இருவர் கைது

பாகிஸ்தானில் நூற்றுக்கு மேற்பட்ட குழந்தைகளைக் கொன்றவர் எனச் சந்தேகிக்கப்படும் ஜேவிட் இக்பாலின் மேலும் இரு சகாக்களை பொலீஸார் கைது செய்துள்ளனர்.

ஸாபர் இக்பால்(வயது 22), ஸாபிர்(வயது 17) ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டவர்களாவர். தாங்கள் இருவரும் இக்பாலின் கொலைகளுக்கு உடந்தையாக இருந்ததாக அவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர் என்று லாகூர் பொலீஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக விசாரணை நடத்தி வரும் பொலீஸார் இக்பாலின் மனைவி, மகள் உட்பட 9 பேரை ஏற்கனவே கைது செய்துள்ளனர்.

அதேசமயம் —

ஜேவிட் இக்பாலின் வீட்டில் இருந்து மீட்கப்பட்ட குழந்தைகளின் பொருள்கள் மற்றும் எச்சங்களில் இருந்து 60 குழந்தைகளை அவர்களது பெற்றோர் அடையாளம் காட்டி உள்ளதாக பொலீஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

## விவேகானந்தர் இல்லம் பார்வைக்கு

சுவாமி விவேகானந்தர் 102 ஆண்டுகளுக்கு முன்னர் சென்னையில் தங்கி இருந்த இடமான விவேகானந்தர் இல்லம் இந்த மாதம் 20 ஆம் திகதி பொதுமக்களின் பார்வைக்கு திறந்து விடப்பட உள்ளது.

பொதுமக்களின் பார்வைக்கு திறந்து விடப்படுவதற்காக அந்த இல்லத்தை புதுப்பிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதாக சென்னை இராமகிருஷ்ண மடத்தின் தலைவர் சுவாமி கௌதமானந்தா தெரிவித்தார்.

அந்த இல்லத்தின் முதலாவது தளத்தில் வேதகாலத்தில் இருந்து தற்காலம் வரை இந்து சமயத்துடன் தொடர்புடைய பல்வேறு ஓவியங்களும், முதலாவது மாடியில் விவேகானந்தர் தொடர்பான புகைப்படங்களும் காட்சிக்கு வைக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறினார். (இ-6-9)

நளினியின் மரண தண்டனை குறித்த

# சோனியாவின் கோரிக்கையை ஜனாதிபதி நிராகரிக்க வேண்டும்

## தமிழ்நாடு காங்கிரஸ் கோரிக்கை

சென்னை, டிசெ. 8

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட நளினியின் தண்டனையைக் குறைக்குமாறு கோரி காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியாகாந்தி இந்திய ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கருணை மனுவை ஜனாதிபதி கே. ஆர் நாராயணன் நிராகரிக்க வேண்டும்.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர்களில் ஒருவரான எஸ். அன்பரசு இவ்வாறு கோரி உள்ளார்.

நேற்று முன்தினம் வேலூரில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட சாந்தன், முருகன், பேரறிவாளன், நளினி ஆகிய நால்வருக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும்.

தமிழ் நாட்டில் புலிகளுக்கு ஆதரவாக பாட்டாளி மக்கள் கட்சி உட்பட சில கட்சிகள் செயற்பட்டு வருகின்றன. இந்தக் கட்சிகளைத் தடை செய்ய வேண்டும் என்று மத்தியில் உள்ள பாரதீய ஜனதாக் கட்சி அரசாங்கத்தை நான் கோரி உள்ளேன்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (இ-6-9)

# உலகில் அமைதி வேண்டி தமிழகத்திலிருந்து யாத்திரை

சென்னை, டிசெ. 8

உலகில் அமைதி ஏற்பட வேண்டி தமிழகத்தில் இருந்து ராஜஸ்தான் மாநிலத்துக்கு இரண்டு மாத கால பாத யாத்திரை ஒன்று நடைபெற உள்ளது

இந்தப் பாதயாத்திரை இன்று இராமேஸ்வரத்தில் ஆரம்பமாகும் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள மவுண்ட் அபு என்ற இடத்தில் நிறைவு பெறும்.

## உலக அரங்கில்

பிரம்மாகுமாரிகள் ஈஸ்வரிய வித்தியாலயம் இந்தப் பாதயாத்திரையை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது

இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாதசுவாமி ஆலய மூன்றாம் பிரகாரத்தில் இருந்து பாதயாத்திரை ஆரம்பமாகும். தமிழக தொழிலாளர் நலத்துறை அமைச்சர் ரகுமான் கான் இராமேஸ்வரம் அறங்காவலர் குழுத் தலைவர் குமரன் சேதுபதி இராமேஸ்வரம் பங்குத்தந்தை சேகராஜ் அடிகள் ஆகியோர் கலந்து கொண்டு இந்தப் பாதயாத்திரையை ஆரம்பித்து வைக்க உள்ளனர்.

நூற்றுக் கணக்கானோர் பாதயாத்திரையில் கலந்து கொண்டு உலக சமாதானத்துக்காக பாடுபடப் போவதாக பிரம்மகுமாரிகள் ஈஸ்வரிய வித்தியாலய அதிபர் தெரிவித்தார். (இ-6-9)

## ஆளும் கட்சி வெற்றி

நமீபியா, டிசெ. 8

நமீபியாவில் நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தல்களில் தற்போதைய பிரதமர் ஷாங் நியுமா மீண்டும் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

தேர்தல் முடிவுகளின் படி ஆளும் கட்சிக்கு 76 சதவீத வாக்குகள் பதிவாகி உள்ளன என்று தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது

## உயிரிழந்தோர் எண்ணிக்கை உயர்வு

வியட்கொங், டிசெ. 8

மத்திய வியட்நாமில் ஒரு மாதத்தில் இரண்டாவது தடவையாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 105 ஆக உயர்ந்துள்ளது மேலும் 22 பேர் காணாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ந்து பெய்யும் மழையால் வெள்ளம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக அறிவிக்கப்படுகிறது (-6)

# அடுத்த ஆண்டை தமிழ் ஆண்டாகப் பிரகடனப்படுத்துக

## இல. கணேசன் கோரிக்கை

சென்னை, டிசெ. 8

எதிர்வரும் ஜனவரி மாதம் 15 ஆம் திகதி முதல் ஆரம்பமாக உள்ள புதிய திருவள்ளுவர் ஆண்டை தமிழ் ஆண்டாக இந்திய மத்திய அரசு பிரகடனப்படுத்த வேண்டும் என்று பாரதீய ஜனதா கட்சியின் தமிழ் நாட்டு பிரிவுப் பொதுச் செயலர் இல. கணேசன் கோரி உள்ளார்

இது தொடர்பாக அவர் மத்திய அமைச்சர் முரளி மனோகர் ஜோஷிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்து உள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் திருக்குறளை எழுதிய திருவள்ளுவர் பெயரை தேசிய குழுக் கூட்டம் நடைபெறும் இடத்துக்குச் சூட்ட முடிவு செய்துள்ளோம்

புதிய நூற்றாண்டின் ஆரம்ப நாளில் கன்னியாகுமரியில் விவேகானந்தர் பாறை அருகே மிகப்பெரிய திருவள்ளுவர் சிலை திறக்கப்பட உள்ளது. ஆசியாவிலேயே பெரிய சிலையாக இது இருக்கும். திருவள்ளுவர் சிலை திறப்பை ஒட்டி புதிய ஆண்டை மத்திய அரசு தமிழ் ஆண்டாக அறிவிக்க வேண்டும்.

கடந்த ஆண்டை மத்திய அரசு சமஸ்கிருத ஆண்டாகப் பிரகடனப்படுத்தி இருந்தது எனவே எதிர்வரும் ஆண்டை தமிழ் ஆண்டாக அறிவித்து, ஆண்டு முழுவதும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக மத்திய அரசு திட்டமிட வேண்டும்.

இவ்வாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-6-4]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

குமாரவேலு ஞானசேகரம் ஆகிய எனது தேசிய, விசேட அடையாள அட்டைகள் (091009044 - 732303669 X) யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதிக்கும் ஆஸ்பத்திரி வீதிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து நந்தனா ஹோட்டல், 460, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணத்தில் ஒப்படைக்கவும். (71601)

கதிரிப்பாய் இடைக்காட்டைச் சேர்ந்த கைலாயபிள்ளை சிறிநியாகரன் ஆகிய எனது விசேட அடையாள அட்டை (0903000320) 05 - 12-99 இல் கந்தர் மடம் சந்தியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள், ரவிகர ராஜ், 132, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம் என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (71593)

இரத்தினம் ஜெயக்குமார் என்பவரது விசேட அடையாள அட்டை (0905001394) 28 - 11 -99 அன்று இணுவில் தியேட்டர் ஒழுங்கைக்கும் காரைக்கால் சிவனகோவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மா. இரத்தினம், சாகயபுரம் மாதகல் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (71587)

நுணாவில் மேற்கு சாவகச்சேரியைச் சேர்ந்த கணபதி தர்மபாலன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (681583432V) விசேட அ. அட்டை (091023133), என்பன கைதடிச் சந்திக்கும் கோப்பாய் வீதிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் நவரத்தின ராசா, ராசா கடை, நுணாவில் மேற்கு என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் தரப்படும். (71604)

### விற்பனைக்கு

இரண்டு மாதம் நிரம்பிய பூச்சி அகற்றிய (Original Dash Hound) நாய்க்குட்டிகள் கறுப்பு, பிறவுண் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கிளி மாமா பிரசாத் வீதி. (சந்தை ஒழுங்கை) நவாலி தெற்கு, மானிப்பாய். (71610)

3¼' உயர திண்டுக்கல இரும்புப் பெட்டி (அயன் சேவ்) 311, கே. கே. எஸ் வீதி, கடையிலும் 2¼' உயர திண்டுக்கல் இரும்புப்பெட்டி (அயன் சேவ்)92, 4ஆம் குறுக்குத் தெருவிலும் நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: எஸ். ஜி. பிள்ளை 92, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். பார்வையிடும் நேரம்: காலை 9 – 4 மணி வரை. (71552)

## விண்ணப்பதிகதியை நீடிக்க கோரிக்கை

இந்து கலாசார திணைக்களம் அறநெறிப் பாடசாலைகளுக்கு இடையில் நடத்தும் பேச்சுப்போட்டிக்கான விண்ணப்பத் திகதியை இம்மாத இறுதிவரை நீடிக்கவேண்டும் என வட பிராந்திய இந்துப் பேரவை துணைச் செயலாளரும் சரசாலை இந்து மன்றச் செயலாளருமான க. சிவசங்கரநாதன் இந்து கலாசாரப் பணிப்பாளரைக் கேட்டுள்ளார்.

யாழ்ப்பாண குடாநாட்டு அறநெறிப் பாடசாலைகள் சிலவற்றுக்கு இந்தப் பேச்சுப் போட்டி விவரங்கள் மற்றும் விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கவில்லை.

இந்தப் போட்டியில் மாணவர்கள் பங்குபற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்தே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது. (இ-க)

### வீடு விற்பனைக்கு

மீசாலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலயத்திற்கு அண்மையில் வீடும் (05 அறைகள் Terrazzo தளமிடப்பட்டது). நீர்த்தாங்கியுடன் கூடியதுமான 16 பரப்புக்காணியும் வீடும் முழுமையாக அல்லது வீடும் 6 பரப்புக்காணி பகுதியாகவும் விற்பனைக்குஉண்டு. தொடர்புகளுக்கு: ஸ்ரீ. கதிர்காமநாதன், ஆங்கில மொழிக் கற்பித்தல் பிரிவு. யாழ். பல்கலைக்கழகம் அல்லது கேணியடி ஒழுங்கை, மீசாலை மேற்கு, மீசாலை. (71378)

### கல்வி 2000 ஆண்டு

ஆண்டு 6 – O/L வரை ஆங்கிலம், கணிதம் விசேடமாக முதலாம் தவணையில் உயர்ந்த பெறுபேறடையவும் Spoken English அனுபவமுள்ள ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, சிவன்கோயிலடி, (சிவன் கோயில் பின்புறம்), திருநெல்வேலி. (71581)

### வான் விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள A C பொருத்தப்பட்ட Isuzu - Fargo வான் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 109, இராசாவின்தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். (71598)

### இறைச்சிக் கோழி

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். இல. 19. முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (71512)

### ENGLISH CLASSES

Improve Your Skills And Knowledge in English General English G C, E. (O/L) And TOEFL Done Taught By American Graduate Contact: K Umasuthan, 112, Palaly Road, Near Campus Junction, All Translations From Tamil To English. One or Many Pages. (71582)

# இன்றுமுதல் 13 ஆம் திகதி வரை வாக்காளர் அட்டைவிநியோகம்

யாழ்ப்பாணம், டிசெ.8

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் வேலைகள் இன்று தொடக்கம் 13 ஆம் திகதி வரை யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன என்று யாழ். பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். தேர்தல் திணைக்களத்தினால் பிரதம தபாலகத்துக்கு அனுப்பப்பட்டிருந்த வாக்காளர் அட்டைகள் தரம் பிரிக்கப்பட்டுக் குடாநாட்டில் வாக்களிப்பு நடைபெறவுள்ள 11 தேர்தல் தொகுதிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும்—

இன்று முதல் 13 ஆம் திகதி வரை வாக்காளர்களுக்கு இவற்றை விநியோகிக்கும் பணிகள் ஆரம்பமாகும் என்றும்—தெரிவிக்கப்பட்டது.

13 ஆம் திகதிக்குப் பின்னர் வாக்காளர் அட்டைகள் கிடைக்கப் பெறாத வாக்காளர்கள் எதிர்வரும் 21 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு முன்னதாக யாழ் பிரதம தபாலகத்துக்கு நேரில்சென்று தமது வாக்காளர் அட்டையைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

வாக்காளர் அட்டைகளுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காக யாழ் பிரதம தபாலகத்தில் பாதுகாப்புப் படையினர் நிறுத்தப்பட்டுப் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. (இ-9)

## நன்றி கூறுகின்றேன்

சைவச் சிறுவர் இல்லத்துக்கும்
சங்க பவளவிழாவுக்குமான நிதி சேகரிப்பு - 1999

மேற்படி நிகழ்வுக்கு எனது வேண்டுகோளை ஏற்று ரூபா - 19,600 நிதியுதவி அளித்து பங்களிப்புச் செய்த எனது பிரிவு மக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வி. கே. நித்தியானந்தன்,
கிராம உத்தியோகத்தர்,
திருநெல்வேலி மத்தி, வடக்கு.

(71605)

## தேவை

நம்பர் அடித்து புத்தகம் கட்டுவதில் அனுபவமுள்ள
பெண் பைண்டர் (BINDER) ஒருவரும்
பெண் பயிலுநர்களும் தேவை.
நேரில் வரவும்.

**சரவணாஸ் அச்சகம்**
233, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (71611)

## கண்ணீர் அஞ்சலி

எமது செயலக நிர்வாக உத்தியோகத்தர்
திரு. மு. சிவராஜா அவர்களின்
அன்புத் தாயார்

**திருமதி விருத்தாம்பாள் முத்துலிங்கம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரதேச செயலரும்
பிரதேச செயலக நலன்புரிச் சங்கத் தலைவரும்
உறுப்பினர்களும்.

பிரதேச செயலகம்,
வலிகாமம் மேற்கு,
சங்கானை.

(சி/10130)

## பாராட்டுகின்றோம்

எமது நிலைய கீதத்தை சிறந்த முறையில் இயற்றித் தந்த
மதுரகவி
**காரை எம். பி. அருளானந்தம்**
அவர்கள் ஜேர்மனியில் இருந்து வெளியாகும்
'மண்' சஞ்சிகையால்
நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் முதலிடம் பெற்றமையையிட்டு வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.


ஞானவிர சனசமூக நிலையம்
கோண்டாவில்.

(சி/10127)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

08 12 - 1999

தோற்றம் 31 – 07 – 1968



மறைவு 09 – 11 – 1999


செல்வி
**ஜெயஸ்ரீ கணபதிப்பிள்ளை (B. Sc.)**

பட்டமேற்பே நின் கனவாக
படுத்திருந்தீர் பிணியாக
வாட்டிய நோய் தீர்க்கவென
எடுத்தீர் முடிவு கொழும்பு செல்ல
திட்டம் ஏதும் பலிக்காது
கொடிய சுரம் வந்தணைக்க
பட்டம் பெற்ற வைத்தியரால்
கொடுக்க மருந்து இயலாமல்
கெட்ட காலன் அவசரமாய்
தொடுத்தான் பாசக்கயிற்றினையே
விட்டகலாப் பாசத்தால்
வாடுகின்றோம் உம் நினைவாலே!
நட்டம் புரியும் ஈசனவன்
திருவடியை நீ சேர்வாயே,

– குடும்பத்தினர்

தும்பளை மேற்கு,
பருத்தித்துறை.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**அப்பாப்பிள்ளை நடராசா பத்தர்**

மலர்வு 13 - 10 - 1926
உதிர்வு 19 - 12 - 1998
திதி: 08 - 12 - 1999

பண்போடு அறிவூட்டிப் பாங்காய் வளர்த்தீர்
கண்போலக் கருதியுமே எமைக்காத்து நின்றீர்
மண்பொலிவுத் தெய்வமென மாண்புடனே வாழ்ந்தீர்
எண்ணமதில் என்றுமுமைப் பூசித்து வாழ்வோம்.

உங்கள் பிரிவில் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்
மற்றும் உற்றார், உறவினர்.

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

(71575)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தின் போக்கை மாற்றக் கூடியதான

# அரசியல் மாற்றமே உடனடி அவசரத் தேவை

## மலையக மக்கள் முன்னணி தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 8

தற்போதைய அரசியல் நிலை மீண்டும் நீடிக்குமானால் 'விட்டதிலிருந்து யுத்தத்தைத் தொடங்க வேண்டுமென்பதே' அடுத்த இலக்காகத் தெரிகின்றது. எனவே யுத்தத்தின் போக்கை திசை மாற்றக்கூடிய அரசியல் மாற்றமும் ஆட்சி மாற்றமும் உடனடியாக அவசரத்தேவையாக உள்ளது.

மலையக மக்கள் முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இருந்து விலகி ஐ. தே. கவில் இணைவதற்கான காரணத்தை விளக்கி அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையின் விவரம் வருமாறு;-

இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து பின்தங்கிய மலையக தமிழ்மக்களை மேம்படுத்துவதற்கு எந்த அரசாங்கமும் ஆக்கபூர்வமான முயற்சிகளில் ஈடுபடவில்லை என்ற விமர்சனத்தோடுதான் மலையக மக்கள் முன்னணி தோற்றம் பெற்றது

மலையக பிரதேசத்தின் அபிவிருத்திகளுக்காகவும் அரசியல் உரிமைகளுக்காகவும் மலையக தலைமைகள் கோரிக்கைகளை முன் வைக்காததோடு இதனை அரசுகளுக்கு நிர்பந்திக்கக் கூடிய போராட்டங்களின் அவசியத்தையும் மலையகத் தலைமைகள் உணர்ந்திருக்கவில்லை என்பதே மலையக மக்கள் முன்னணியின் நிலைப்பாடாகவும் இருந்தது

1994 ஆம் ஆண்டு தேர்தலின்பின் எமது ஒரு வாக்கினால் தான் ஆட்சி அமைக்க முடியும் என்ற நிலை ஏற்பட்டபோது மலையக மக்களின் அரசியல் பொருளாதார உரிமைகள், மலையக பிரதேசத்தின் அபிவிருத்தி ஆகியவற்றுக்குப் புதிய வடிவம் கொடுக்கவே மலையக மக்கள் முன்னணி பொதுஜன ஐக்கியமுன்னணிக்கு ஆதரவுதெரிவித்தது

கடந்த பொது ஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில் எமது கோரிக்கைகள் பலவற்றை நடைமுறைப்படுத்தும் ஆரம்பம் தொடங்கியது.

இதுஒருதொடக்கமே தவிர திருப்தியோடு மனநிறைவடையக் கூடிய முழுமை அதில் தென்படவில்லை.

எமது கோரிக்கையின் அடிப்படையில் மலையகத்தில் பல காரியங்களை வரலாற்றில் முதல் முறையாக ஐக்கிய முன்னணி அரசு செய்ய ஆரம்பித்தது என்றாலும் அதை செயல்படுத்திய வேகம், அதில் உள்ள அசிரத்தை, குறைபாடுகள் அவைகளை செய்து முடிக்கக் கூடிய காலவரையறை — இவைகளில் மலையக மக்கள் முன்னணி திருப்தியடையவில்லை.

இது தொடர்பான விமர்சனங்களை அடிப்படையாகக் கொண்டு எதிர்கால செயற்பாடுகளுக்கான நியாயபூர்வமான கோரிக்கைகளையும் ஆலோசனைகளையும் ஜனாதிபதிக்கு கையளித்திருந்தோம். இவைகளுக்கு ஒப்புதலான தெளிவான, தீர்க்கமான பதிலை இதுவரையும் எம்மால் பெறமுடியவில்லை.

ஐக்கிய முன்னணி அரசு ஆட்சியமைப்பதற்கு மிக முக்கியமான பிரதான பங்களிப்பை மலையக மக்கள் முன்னணி வழங்கியது. ஆனால் அதற்குரிய முக்கியத்துவம் எமக்குக் கிடைக்கவில்லை. எமது கட்சியின் அரசியல் கௌரவம் கேள்விக் குறியாக்கப்பட்ட அனுபவத்தையும் நாங்கள் பலமுறை சந்தித்தோம். தொடங்கிய பணியை முடித்தளவு முன்கொண்டு செல்ல வேண்டும் என்ற நோக்கில் ஜீரணித்துக்கொண்டிருந்தோம்.

ஆனால் புதிய அரசியல் மாற்றமொன்று ஏற்பட்ட போதென்ற இக்கால கட்டத்தில் எமது எதிர்கால அரசியல் அந்தஸ்துக்கு உறுதியான உத்தரவாதம் இருக்க வேண்டும் என்பதை மலையக மக்கள் முன்னணி உணர்கின்றது.

உரிய அரசியல் அங்கீகாரமும் நம்பிக்கையுடனான புரிந்துணர்வும் இல்லாத அரசோடு இணைந்திருப்பது எதிர்காலத்தில் எவ்விதமான அரசியல் சாதகங்களையும் மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க முடியாதென மலையக மக்கள் முன்னணி கருதுகின்றது.

எமது நாட்டில் எரிகின்ற பிரச்சினையாக ஆகிப்போய் இருக்கின்ற இனப் பிரச்சினைக்கும் யுத்தத்துக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு எடுத்தநிலைப்பாட்டை நாங்கள் அங்கீகரிக்கவில்லை துரதிர்ஷ்டவசமாகத்தொடங்கப்பட்டதாகச் சொல்லப்படுகின்ற யுத்தம் ''இனப்பிரச்சினைக்கு யுத்தமே தீர்வு'' என்ற இலக்கை நோக்கியே நகர்ந்திருக்கின்றது.

சமாதானத்துக்காக யுத்தம் என்று சொல்லப்பட்டாலும் சமாதானத்துக்கான சமிக்ஞையை ஏற்படுத்த அரசு முனையவில்லை. சமாதானத்துக்கான உதவிக்கரம் சர்வதேச ரீதியில் நீட்டப்பட்டபோதும் அது உதாசீனப்படுத்தப்பட்டு நிராகரிக்கப்பட்டே வந்துள்ளது.

நாட்டு அபிவிருத்தி ஸ்தம்பித்துப் போயிருப்பதோடு எமது பொருளாதாரமும் யுத்த தளபாடங்களுக்கு விரயமாக்கப்பட்டுள்ளது. யுத்த பூமியில் வாழுகின்ற மக்கள் தங்களின்வீடுகளையும் சொத்துக்களையும் இழந்து பிறப்பிடத்தை விட்டே அகதிகளாக விடப்பட்டுள்ளார்கள் முன்னெப்பொழுதும் இல்லாத அளவு அவர்களின் சமூக கட்டமைப்பு சிதறடிக்கப்பட்டுள்ளது

தமிழ் சமுதாயத்தின் சீரழிவுமட்டுமல்ல, சிங்கள இளைஞர்களின் அநியாய உயிரிழப்பும், அதனால் சிங்களக் குடும்பங்களின் சீரழிவும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

மூன்றாம் தரப்புப் பேச்சுவார்த்தை என்ற எங்களின் கோரிக்கைக்கு இன்று வரை அரசிடமிருந்து பதில் இல்லை.

மீண்டும் இதே அரசியல் நிலை நீடிக்குமானால் 'விட்டதிலிருந்து யுத்தத்தைத் தொடங்க வேண்டுமென்பதே' அடுத்த இலக்காகத் தெரிகின்றது.

இந்நிலையில் இலங்கையின் பொருளாதாரமும் இம்மக்களின் அமைதியானவாழ்வும்நிர்மூலமாக்கப்படுகின்ற ஓர் அரசியல் முடிவுக்கு மலையக மக்கள் முன்னணி துணையாக இருக்கக்கூடாது என்ற முடிவை எமது கட்சி எடுக்கின்றது.

யுத்தத்தின் போக்கைத் திசைமாற்றக்கூடிய அரசியல் மாற்றமும் ஆட்சி மாற்றமும் அவசர தேவையாக உள்ளது.

கடந்த காலங்களில் இது தொடர்பான எமது கருத்துக்களையும் விமர்சனங்களையும் அரசுக்கு முன் வைத்துள்ளோம். ஒருநிலையான ஆட்சி நீடிக்கின்றபோது தனியொரு நாடாளுமன்ற உறுப்பினரை வைத்துக்கொண்டு வேறு தீவிர முடிவுகளை எடுப்பதனால் எந்தத் தாக்கமும் ஏற்படப்போவதில்லை என்பதை உணர்ந்திருந்ததால், மலையக மக்கள் முன்னணி ''பார்வையாளனாக'' மட்டுமே இருக்க நேர்ந்தது

ஆனால் இப்போது ஆட்சி மாற்றமும் அரசியல் மாற்றமும் ஏற்படுத்தப்படுகின்ற காலகட்டம் இந்த நேரத்தில் மலையக மக்கள் முன்னணி தனது உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்திச் சரியான அரசியலுக்குப் பலம் சேர்க்கவேண்டிய வரலாற்றுத் தேவையும் கடமையும் இருக்கின்றது என்பதை நாம் புரிந்துகொள்கின்றோம்.

நாம் முன் வைத்த கோரிக்கைகளுக்கு அரசியல் ரீதியிலானபொறுப்புமிக்கமதிப்பை ஐக்கிய தேசியக்கட்சி தந்திருக்கின்றது அவர்களின் பதிலில் அமைந்துள்ள அரசியல் நிலைப்பாடு எமது எதிர்பார்ப்பை ஈடுசெய்ய நல்லதோர் அடித்தளமாக அமையக்கூடுமென மலையக மக்கள் முன்னணி எதிர்பார்க்கின்றது.

எமது கோரிக்கைகளின் இலக்குகளை அடைவதற்கு ஐக்கியதேசியக் கட்சியோடு புரிந்துணர்வுடனான அரசியல் பேச்சுக்கு சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது

இந்நிலையில் மலையக மக்களின் உரிமைகளை உறுதி செய்யவும் அவர்களின் வாழ்க்கையில் புதிய நம்பிக்கைகளை ஏற்படுத்தவும் யுத்தத்தை நிறுத்தி முழு நாட்டிலும் அமைதியான அரசியல் சூழ்நிலையை உருவாக்கவும் ஐக்கியதேசியக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றி வழிவகுக்கும் என நம்புகிறோம்.

இலங்கையில் இருண்ட வரலாற்றில் இருக்கிற யுத்த சூழல் முற்றாக மாறி 21 ஆம் நூற்றாண்டில் மக்கள் சுபீட்சமாக வாழ்வதற்கான அரசியல் மாற்றம் ஏற்படும் என நம்புகிறோம் — என்றுள்ளது

(க-3)

# பயிர் அழிவுக்கு நஷ்டஈடு வழங்கக் கோரிக்கை

சண்டிலிப்பாய், டிசெ. 8

இம்முறை காலபோக நெற்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு ஏற்பட்ட பயிரழிவுகளை நேரில் பார்வையிட்டு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும். கடந்த 1998 ஆம் ஆண்டு கால போக நெற்செய்கை அழிவுகளுக்கு எவ்வித நஷ்டஈடும்வழங்கப்படாதிருப்பது கவலைக்குரியது,

மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனம் வடக்கு கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளது.

சம்மேளனத்தின் சார்பில் அதன் தலைவர் சி.பொ.ம.க முதலியாரினால் அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் இம் மகஜரில்—

எமது பிரதேச விவசாயிகள் கடும் முயற்சி செய்து விதைத்த நெற்பயிர்கள் இவ்வருடம் சரியான முறையில் வளராது கால நிலை சீர் கேட்டினால் மிகவும் பாதிப்படைந்துள்ளன. இதனால் இவ் விவசாயிகள் செய்வதறியாது மிகவும் நஷ்டமடைந்துள்ளார்கள். இதுபற்றி தங்கள் அதிகாரிகள் மூலம் ஆய்வு மேற்கொண்டு நஷ்டஈடு நிவாரணம் வழங்க ஆவண செய்யுமாறு வேண்டுகின்றோம் — என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ம் மகஜரின் பிரதி யாழ். கமநலச் சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஜ-135)

# மட்டு., அம்பாறையில் ரணில் தேர்தல் பிரசாரம்

மட்டக்களப்பு, டிசெ. 8

ஐ. தே. கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர்ரணில்விக்கிரமசிங்க மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் நடத்திய தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் பல்லாயிரக் கணக்கில் மக்கள் திரண்டனர்.

தான் ஆட்சிக்கு வந்தால் உடனடியாகப் புலிகளுடன் பேச்சு நடத்தப் போவதாகவும் வடக்கு, கிழக்குக்கு இடைக்கால நிர்வாக சபை ஒன்றை அமைக்கப் போவதாகவும் அவர் தனது பிரசாரக் கூட்டங்களில் தெரிவித்தார்.

மட்டக்களப்பு நகரில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் பேசிய ரணில் விக்கிரமசிங்க—

ஜே வி. பியுடன் முன்னொரு சமயம் மோதிவிட்டு அவர்களை எவ்வாறு ஐ. தே. கட்சி ஜனநாயக வழிக்குக் கொண்டு வந்ததோ அதே போன்று புலிகளையும் ஜனநாயக வழிக்குக் கொண்டு வருவோம் என்றும் —

தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி யுத்தத்துக்குத் தீர்வுகாண தனக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களை ஜனாதிபதி சந்திரிகா தவறவிட்டுவிட்டார் என்றும் — குறிப்பிட்டார்.

''சந்திரிகா யுத்தத்தில் தான் ஆர்வம் காட்டி வருகின்றார். இதன் விளைவாக பெரும் எண்ணிக்கையான பொதுமக்களும் 13 ஆயிரம் படையினரும் பலியாகியுள்ளனர். தொடரும் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள புலிகளும் நமது நாட்டின் பிரஜைகளே''— என்றும் அவர் குறிப்பிட்டார்.

(உ-7-21)

# பயிற்சிநெறி நிறைவும் கண்காட்சியும்

சுழிபுரம், டிசெ. 8

பண்ணாகம் மாதர் கிராம அபிவிருத்திச்சங்கத்தில் பட்டினிக்கெதிரான நிறுவனத்தின் ஆதரவுடன் நடைபெற்ற உள்ளூர் விவசாய விளை பொருள் பதனிடும் பயிற்சி நெறி நிறைவு நாளும் கண்காட்சியும் நாளை வியாழக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு சங்க மண்டபத்தில் சங்கத் தலைவி திருமதி சி. அன்புமலர் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதேச செயலர் கா. சந்திரராசா பிரதமவிருந்தினராக கலந்து கொள்வார்.

(க-28)

## யாழ். மாவட்டத்தில்

# மேல் நீதிமன்றம் இயங்க ஏற்பாடு செய்யக் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ 8

''யாழ். மாவட்டத்தில் மேல் நீதிமன்றம் இயங்க ஏற்பாடு செய்ய வேண்டும்'' என்று நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸிடம் புளொட் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

புளொட் அமைப்பின் யாழ் கிளையினர் அமைச்சர் பீரிஸுக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். குடாநாட்டில் சிவில் நிர்வாகம் உருவாக்கப்பட்டு பல காலமாகியும், நீதிமன்றங்களுக்கு போதிய அளவு நீதிபதிகள் நியமிக்கப்படவில்லை. சகல நீதிமன்றங்களுக்கும் நீதிபதிகளை நியமிக்க ஆவன செய்ய வேண்டும்

யாழ்ப்பாணத்தில்மேல் நீதிமன்றம் இயங்காத காரணத்தால் அநுராதபுரம் நீதிமன்றத்துக்கே இங்குள்ள மக்கள் செல்ல வேண்டியுள்ளது. எனவே யாழ்ப்பாணத்தில் மேல் நீதிமன்றம் இயங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் — என்றுள்ளது

(இ-3)

## ஆள் கடத்தல் வழக்கில்

# 60 முதல் 80 வருட கடூழியம் 13 பேருக்கு!

கொழும்பில் பிரபல வர்த்தகர் ஒருவரைக் கடத்தி இரண்டு கோடி ரூபா பணயமாகக் கேட்டது தொடர்பாக மூன்று எதிரிகளுக்குத் தலா எண்பது வருடக் கடூழியச் சிறையும் ஏனைய பத்து எதிரிகளுக்குத் தலா அறுபது வருடக் கடூழியச் சிறையும் விதித்துக் கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று முன்தினம்தீர்ப்பு வழங்கியது.

கடந்த மார்ச்மாதம் 13 ஆம் திகதி இந்தக் கடத்தல் சம்பவம் இடம்பெற்றது.

பணயப் பணத்தைக் கொடுத்து வர்த்தகரை விடுவிக்கச் செய்த பொலீஸார் அடுத்த ஒரு வார காலத்துக்குள் பணயப் பணத்தையும் அப்படியே மீட்டதுடன் சந்தேக நபர்கள் 13 பேரையும் கைது செய்தனர்.

நான்கு மாத விசாரணையின் பின்னர் நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கியது

எதிரிகளுக்குத்தலா 4இலட்சம்முதல் 5 இலட்சம ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. அதைச் செலுத்தத் தவறினால் மேலும் 5 வருடங்கள் சிறைத் தண்டனை வழங்கப்படும் என்றும் நீதிமன்றம் அறிவித்தது (உ-5)

# திருமலையில் இரவில் வேட்டுக்கள்

திருகோணமலை நகரப்பகுதியில் கடந்த சில நாள்களாக இரவு நேரங்களில் துப்பாக்கிச்சூட்டுச் சத்தங்கள் கேட்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நகரப் பகுதியில் நள்ளிரவு நேரத்தில் இராணுவத்தின் மோட்டார் சைக்கள் பிரிவு ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
THE JAFFNA EDUCATION CENTRE
(சாந்தி சினிமா முன்பாக மேல்மாடியில் வலது பக்கம்)
SPOKEN ENGLISH
With
GRAMMAR
சிங்களம்
SHORTH AND TYPING ஆகிய பாடங்கள்
இருமொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன.
புதிய பிரிவு ஆரம்பம்: 10 – 12 – 99
(71596) – நிர்வாகி


## கண்ணீர் அஞ்சலி


எமது திணைக்கள சக உத்தியோகத்தர்
செல்வி பொ. கண்ணகி அவர்களின்
அன்புத் தந்தையார்
### உயர் திரு. பொன்னம்பலம்

அவர்கள் 4. 12. 1999 இல் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

உதவி ஆணையாளரும் சக உத்தியோகத்தர்களும்,
கமநல சேவைகள் திணைக்களம்.
கமநல சேவை நிலைய உத்தியோகத்தர்கள்,
கமத்தொழில் காப்புறுதிச் சபை உத்தியோகத்தர்கள்.

யாழ். மாவட்டம். (71589)

## பதினொராம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### கந்தையா அரசக்கோன்

(கொழும்பு கப்பல் துறை ஒப்பந்தகாரரும்
AS ரவல்ஸ் உரிமையாளரும்)

தோற்றம் 07-09-1937 மறைவு 08-12-1988

அன்… …வமே! ஆருயிர் டடியே!
அன்பின் இலக்கணமாய் அமைதியின்
உறைவிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
நின்று பாசமும் பரிவும் காட்டி
வளர்த்து எங்களை வாழ வைத்துவிட்டு
மீளாப் பயணம் சென்ற எங்கள் அன்புத்
தெய்வத்தை உயிர் உள்ள வரை நாம் மறவோம்!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

அன்பு மனைவி, உயிர்ச் செல்வங்கள்
மகள் — லதா (கனடா),
மருமகன் — சிவசொருபன்,
பேரப்பிள்ளைகள் — அபிநயா,
விக்கினேஸ்வரன்,
மகள் — சோபனா (லண்டன்),
மருமகன் — சிறீதரன்.

12, மல்லிகா வீதி,
வெள்ளவத்தை (71576)

## இருவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 8

யாழ்ப்பாணம், இருபாலை பகுதிகளில் நேற்று முன்தினம் இரு இளைஞர்கள் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி மூன்றாம் ஒழுங்கையில் வசிக்கும் திரவியம் ஜெயரட்னம் (வயது 29) இருபாலையைச் சேர்ந்த பொடி மாத்தையா தசீலா (வயது 19) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் கைது செய்யப்பட்டது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-5)

## படகு பிடிபட்டது

கொழும்பு, டிசெ. 8

மருந்து மற்றும் உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு வடபகுதி நோக்கி வந்து கொண்டிருந்த இயந்திரப் படகு 'ஒன்றை மன்னார்—பள்ளி முனைக் கடற்பரப்பில் வைத்து நேற்று முன்தினம் அதிகாலை கடற்படையினர் கைப்பற்றியுள்ளதாகவும் —

அதிலிருந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும்—

பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது. (உ-7)

## கான்ஸ்டபிள் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு, டிசெ. 8

கல்முனை சாய்ந்தமருதுப் பகுதியில் நேற்று முன்தினம் காலை 8-30 மணியளவில் பஸ்ஸிற்குக் காத்திருந்த என். எம். அன்ரன் (வயது 28) என்ற பொலீஸ் கான்ஸ்டபிள் சைக்கிளில் வந்த இளைஞர் ஒருவரால் பிஸ்டலால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இச்சம்பவத்தின் போது முச்சக்கர வண்டிச்சாரதி ஒருவர் காயமடைந்தார். (உ-5-21)

## கும்பாபிஷேக மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ. 8

வட்டுக்கோட்டை துணவி அரசடிப் பிள்ளையார் கோயில் மண்டலப் பூர்த்தி சங்காபிஷேகமும் கும்பாபிஷேகமலர் வெளியீடும் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளன.

காலை 6 30மணிமுதல்கிரியைகள் நடைபெற்று 10 மணிக்கு மகா சங்காபிஷேகம் இடம்பெறும். பின்னர்சிவ ஸ்ரீ க. சிவசுப்பிரமணியக் குருக்கள், ஆலயகுருபிரம்மஸ்ரீ ம. கேசவ சர்மா ஆகியோர் கௌரவிக்கப்படுவர்.

நண்பகல் 12 மணிக்கு கும்பாபிஷேக மலர் வெளியிடப்படும். மலர்வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி எஸ். சிவலிங்கராஜா நிகழ்த்துவார். (இ-க)

## கருத்தரங்கு

சண்டிலிப்பாய், டிசெ 8

மாதகல் காந்திஜி சன சமூக நிலையமும், மாதகல் மேற்கு உதய தாரகை சன சமூக நிலையமும் இணைந்து அப்பகுதி மக்களின் முக்கிய குறைபாடுகள், தேவைகள், எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஆகியன பற்றி ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கான கருத்தரங்கு ஒன்றை எதிர்வரும் 12 ஆம் திகதி நடத்தவுள்ளன.

மாதகல் கிழக்கு காந்திஜி சன சமூக நிலயத்தில் நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில் பிரதேசசெயலர் கா. சந்திரராசா, உதவித்திட்டமிடல் பணிப்பாளர் வி. கனகரத்தினம் 'கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் க. ஸ்ரீபதி, சமூக சேவை உத்தியோகத்தர் அ. அமிர்தலிங்கம் மற்றும் கிராம [illegible] கலந்து கொள்வர்

(ஐ-135)


# யூரோமைன்ட்

அக்ரிவ் மல்ரி டிரைக்சனல்
அன்டனாவில் பூஸ்டர் பொருத்தப்பட்டுள்ளது



* அனைத்து அலைவரிசைகளிற்கும் ஒரே அன்டனா
* ஜேர்மன் தொழில்நுட்பம்

LANKA NIPPON
No. 18, Keyzer Street, Colombo 11.
Tel: 437735 Fax: 437736
No. 10, Trelawny Place, (Behind Milk Bar), Bambalapitiya Junction,
Colombo 4. Tel: 589992

(சி/9856)



JAFFNA COLLEGE CEYLON

# WANTED

1. A Teacher to teach English in the Advanced Level classes.

**Qualifications (minimum)**

English medium graduate with 5years Teaching Experience in English.

2. A Qualified Dance Teacher.

Apply before 14th December 99.

– Principal

Jaffna College,
Vaddukoddai. (C/10122)


## முப்பத்தோராம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு: 11 – 06 – 1936



உதிர்வு: 09 – 11 – 1999

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து – வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்டவரான "

அமரர்
### பழனிப்பிள்ளை இராசமாணிக்கம்

காலஞ்சென்ற எங்கள் குடும்பத் தலைவரின் சபிண்டீகரணக் கிரியைகளும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நாளை வியாழனன்று [09-12-99] எமது இல்லத்தில் நடைபெறும். அதன்பின்னர் இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னார் நோயுற்றிருந்த வேளையில் பேருதவி புரிந்த பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை மற்றும் யாழ் போதனா வைத்தியசாலை மருத்துவர்களுக்கும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் அன்னாரின் இறுதிக் கிரியைகளில் நேரில் கலந்து கொண்டும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் எமக்கு ஆறுதல் அளித்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது நெஞ்சார்ந்த நிறைந்த நன்றிகள்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

" குற்றாலம் "
நக்கீரன் வீதி,
அல்வாய் வடக்கு,
அல்வாய் (71590)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சுயதொழில் வளர்ச்சி

அரசாங்க சேவையில் உள்ளவர்களை மதிப்பது போல, சுய தொழிலில் ஈடுபடுவோரையும் சமூகம் மதிக்க வேண்டும் என்ற கருத்து சங்கானையில் நடைபெற்ற பயிற்சிநெறி விழாவில் முன்வைக்கப பட்டுள்ளது.

இனி வரும் காலங்களில் பலரும் சுய தொழில்களையே நாட வேண்டிய தேவை உருவாகும் என்பதனைச் சுட்டிக் காட்டி, அவற்றில் ஈடுபடுவோருக்கு இப்போது சமூகத்தில் மதிப்புக் கொடுப்பதில்லை என்பதனையும் எடுத்துச் சொல்லி, இலங்கை வங்கியின் யாழ். மாவட்ட முகாமையாளர் கே. பாலசுப்பிரமணியம் இது விடயத்தில் மனமாற்றத்தின் அவசியத்தையும் தக்கவாறு வலியுறுத்தி உள்ளார்.

கோழி வளர்ப்பது ஒரு சுய தொழில்; வீட்டுக் கைத்தொழில் ஆனால் ''கோழி மேய்த்தாலும் கோர்ணமேந்திலை மேய்க்க வேணும்'' என்பதே யாழ்ப்பாண மக்களின் விருப்பமாக இருந்தது; இன்னமும் இருக்கிறது. அதற்கான காரணங்களில் தொழில் பாதுகாப்பும் ஓய்வூதியமும் முக்கியமானவை.

இந்த இரண்டு வசதிகளையும் முன்வைத்து அரச பணியாளர்களுக்கு பெரு மதிப்பு அளிக்கப் பட்டது; வழங்கப்படுகிறது. குறிப்பாக திருமணச் சந்தையில் அரச உத்தியோகத்தருக்கு பெரும் கிராக்கியும் மதிப்பும் வழங்கப்பட்டன. அதனால் சுய தொழில்களில் ஈடுபடுவோரை மதிக்கும் மனப்பாங்கு யாழ்ப்பாணத்துச் சமூகத்திடம் மிக மிகக் குறைவாகவே இருந்தது சுமார் முப்பது நாற்பது வருடங்களுக்கு முன்னர் உண்டான பழக்கம் ஊறிப்போய் விட்டது.

அரசாங்க உத்தியோகம் இலகுவில் கிடைக்கக்கூடிய ஒன்றல்ல என இருந்த ஐம்பது அறுபது வருடங்களுக்கு முந்திய காலத்தில், ஒருவரின் தொழிலை, அவரின் வருமானத்தை, நிலபுலம் மற்றும் சொத்துக்களை வைத்தே யாழ்ப்பாணச் சமூகத்தில் மதிப்புக் கொடுக்கப்பட்டது. அனேகர் சுய தொழில்களை நம்பியே தமது வாழ்க்கையை நடத்தினர். அத்தகைய ஒரு நிலை மீண்டும் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரச துறையில் வேலைவாய்ப்புக் குறைந்து, தனியார் உற்பத்தித்துறை, சுயதொழில் ஆகிய இரண்டிலுமே அதிக தொழில் வாய்ப்புகள் உருவாகும் என நம்பலாம்.

இனிவரும் காலங்களில் சுய தொழில்களும் பெருகும் விதத்திலேயே பொருளாதாரக் கட்டமைப்புகள் இயற்றப்படுகின்றன. இத்தகைய ஒரு கால மாற்றத்தின் போது தனியார்துறை மற்றும் சுயதொழில் முயற்சித் துறைகளில் பணிபுரிவோரின் சமூக மதிப்புத் தானாகவே உயர வாய்ப்புண்டு.

எங்கள் பிரதேசத்தின் பொருளாதார நிலையைஉயர்த்துவதற்கானமுயற்சிகள்தேவை. எங்கள் வளங்கள் உரிய வகையில் இனங்காணப்பட வேண்டும். அந்த வளங்களைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்குவதிலேயே எதிர்கால வாழ்வு தங்கியிருக்கிறது; அரசாங்க உத்தியோகத்தில் அல்ல.

தமிழ்ப் பிரதேசங்களில் இயல்பு நிலையும் கட்டுப்பாடுகளும் தடைகளும் நீங்கிய நிலையும் மிக அவசியமானதாகும். தொழில் செய்யும் சுதந்திரம் முழுமையாக இருக்க வேண்டும். அத்தகைய பின்புலத்துடனேயே உற்பத்தியைப் பெருக்க முடியும். திட்டமிட்டுச் செயற்படுவதற்கு முன்னுரிமை கொடுத்தால் சுயதொழில் துறை வளரும். இப்போதிருந்து அதில் ஈடுபடுவோரை மதிக்கும் மனப்பக்குவத்தை ஏற்படுத்திக் கொள்வது நல்லது.

# வங்கிகளின் பாதுகாப்பை பலப்படுத்த அறிவுறுத்து

கொழும்பு, டிசெ. 8

அரசாங்க, தனியார் வங்கிகளில் பாதுகாபபுக்களைப் பலப்படுத்துமாறு வங்கிகளின் பாதுகாப்புப் பிரிவினருக்கு பொலீஸார் அறிவுறுத்தல் விடுத்துள்ளனர்.

விசேடமாகத் திறந்த காசாளர் பகுதிக்குவருபவர்களைப் பரிசோதிக்கும் படியும் அவர்கள்வரும் வாகனங்கள்சம்பந்தமான விவரங்களைப் பதிவு செய்துகொள்ளும்படியும்வங்கி பாதுகாப்பு அதிகாரிகளுக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

அதே சமயம் கொழும்பு நகரில் விடுதலைப் புலிகள் ஊடுருவி உள்ளது குறித்து இரகசிய உளவுப்பிரிவு அறிந்துள்ளதாகவும் கொழும்பில் பல பகுதிகளில் பொலீஸாரும் இராணுவத்தினரும் இணைந்து நடத்திய தேடுதலில் 60சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-4)

# பனை மூலம் பொருளாதார வளர்ச்சி பெறுதல் வேண்டும்

## மேலதிக அரசாங்க அதிபர் உரை

யாழ்ப்பாணம், டிச. 8

பனையில மூலப் பொருள்களைப் பயன் படுத்தி பொருளாதார வளர்ச்சியைப் பெற வழி செய்யப்பட வேண்டும் என்று யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் தெரிவித்தார்.

பனை அபிவிருத்திச் சபையினால் தயாரிக்கப்பட்ட 'பாமி பற்பசை' அறிமுக விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

சபையின் பொதுமுகாமையாளர் சோ. கோகுலதாசன் தலைமையில் நடைபெற்ற இந்த அறிமுக விழாவில் அவர் மேலும் உரையாற்றும் போது கூறியதாவது:-

எமது நாட்டில் மூல வளத்தின் பயன்பாடுகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் காணப்படுவதோடு அவற்றின் மூலம் மேற்கொள்ளப்படும் உற்பத்திகளும் தரம் வாய்ந்தவையாக இருக்கின்றன.

இந்த வகையில் தான் பாமி பற்பசை உற்பத்தியும் இன்று முன்னணியில் திகழ்கின்றது. யாழ்ப்பாணத்தில் விற்பனையாகும் ஏனைய பற்பசைகள் வரிசையில் பாமி பற்பசை சிறந்து விளங்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை — என்றார்.

பாமி பற்பசையின் முதல் நாள் விற்பனையை மேலதிக அரசாங்க அதிபர் ஆரம்பித்து வைக்க யாழ் மாவட்ட ப. நோ. கூ. சங்கத் தலைவர் சி. வி. கே சிவஞானம் பெற்றுக் கொண்டார்.

இந்த விழாவில் யாழ் பிரதேச செயலர் எஸ் செந்தில் நந்தனன் கலந்து கொண்டு உரையாற்றும் போது யாழ். மண்ணின் மூலவளமாக இருக்கும் பனையின் உற்பத்திகள் பெருக வேண்டும் என்று கூறினார்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கே. சண்முகநாதன் அங்கு உரையாற்றும் போது பனை அபிவிருத்திச் சபையினால் ஆரம்பிக்கப்பட்ட ஒவ்வொரு உற்பத்திப் பொருளும் ஏதோ ஒரு வகையில் மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதாக உள்ளது. கூழ் உற்பத்தி மிக உன்னத இடத்தைப் பெற்று விளங்குகின்றது. இதேபோன்று பாமி பற்பசையும் மக்களிடம் செல்வாக்குப் பெறவேண்டும் — என்றார்.

பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் விசேட ஆட்பதிவு திணைக்கள கருத்திட்ட முகாமையாளர் தி. திருலிங்கநாதன் மாகாண ஆணையாளர் ஏ சி. செபநாயகம் ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள். (இ-5)

## வலுவிழந்தோர் தினம்

வலி. தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகம நடத்தும் வலுவிழந்தோர் தினம் இன்று புதன் காலை 9.30 மணிக்கு பிரதேச செயலர் கா. சந்திரராசா தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இவ்வைபவத்துக்கு பிரதம விருந்தினராக மானிப்பாய் ''வாழ்வகம்'' செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பி கலந்து கொள்வார். இந்த நிகழ்வில் கலை நிகழ்ச்சிகளும் பரிசு வழங்கலும் இடம்பெறும். (க-100)

## முன்பள்ளி ஆசிரியர் சம்மேளனம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், டிசெ. 8

யாழ் மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சம்மேளனம் ஒன்று கடந்த 30 ஆம் திகதி நாவலர் கலாசார மண்டபத்தில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

ஏற்கனவே மாவட்டத்திலுள்ள 619 முன் பள்ளி ஆசிரியர்களுக்கான சங்கங்கள் சகல வலயங்களிலும் அமைக்கப்பட்டிருந்தன. தற்பொழுது மேற்படி சம்மேளனம் அமைக்கப்பட்டுள்ளது. (க-10)

# திருட்டை ஒழிப்பதற்கு கந்தர்மடத்தில் விழிப்புக்குழு

கந்தர்மடம் குமாரசாமி வீதியில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருவதனையடுத்து திருட்டுக்களைத் தடுக்கும் நோக்குடன் விழிப்புக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இளைப்பாறிய அதிபர் க. சிவராமலிங்கம் தலைமையில் கந்தர்மடம் பகுதியில் கூடிய மக்கள், திருட்டை ஒழிப்பதற்கு விழிப்புக்குழு அமைக்க வேண்டுமெனத் தீர்மானித்தனர்.

இதன் பிரகாரம் இப்பகுதியைச் சேர்ந்த 16 இளைஞர்கள் விழிப்புக் குழுவுக்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

வீடுகளில் திருட்டுகள் நடைபெறும் போது 'கள்ளன்' எனக் கூச்சலிட வேண்டும் என்றும் இந்தக்குரல் கேட்டதும் எல்லோரும் அந்த இடத்திற்கு உடனடியாக விரைந்து சென்று கள்வனை மடக்கிப் பிடிப்பதெனவும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (இ-5)

# மகளிருக்கான தலைமைத்துவ பயிற்சிநெறி நிறைவு விழா

யாழ்ப்பாணம், டிசெ 8

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெற்ற மகளிருக்கான தலைமைத்துவப் பயிற்சி நெறியின் நிறைவு விழா சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் கே. இராமச்சந்திரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

அகதிகளுக்கான ஐ நா. தூதரக நிதி உதவியுடன் யாழ். மாவட்ட செயலகம் மற்றும் பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களம் ஆகியன இணைந்து நடத்திய இந்தப் பயிற்சி நெறியில் தென்மராட்சி மற்றும் பச்சிலைப் பள்ளி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 30 யுவதிகள் கலந்து கொண்டனர்.

15 நாள்கள் நடைபெற்ற பயிற்சி நெறியின் இறுதி நாளில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன் 30 யுவதிகளும் சேர்ந்து மகளிர் அபிவிருத்தி அமைப்பு என்ற பெயரில் சேமிப்புக் கணக்கு ஒன்றையும் ஆரம்பித்தனர்

மேற்படி நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி, யாழ். செயலக திட்டமிடல் பணிப்பாளர் கே. பாலகிருஷ்ணன், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் எஸ். நாகேந்திரராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்தப் பயிற்சி நெறியின் இணைப்பாளராகத் திருமதி எஸ். சந்திராதேவி செயற்பட்டார். (இ-10)

## காங்கேசனுக்கு விஜயம்

யாழ்ப்பாணம், டிசெ. 8

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் மாவட்ட இணைப்பாளர் எஸ் ஸ்ரீதரன் இன்று புதன்கிழமை காங்கேசன்துறை கைதிகள் தடுப்பு முகாமுக்குச் சென்று அங்குள்ள கைதிகளைப் பார்வையிடவுள்ளார் (க-10)

# யாழ். மக்களுக்கு மிஷனரிகள் ஆற்றிய பணி அளவிட முடியாதது

## நூற்றாண்டு மலர் வெளியீட்டில் உரை

அச்சுவேலி, டிசெ. 8

யாழ். மாவட்ட மக்களின் கல்வி வளர்ச்சிக்கு கிறிஸ்தவ மிஷனரிமார்கள் ஆற்றியபணி அளவிட முடியாத சிறப்பு மிக்கது. கிறிஸ்தவ மிஷனரிமாரின் அர்ப்பணிப்போடு கூடிய கல்விப் பணியால் உயர்ந்துநின்ற தமிழ் மக்களின் கல்வித்தரம் இன்று நிலை குலைந்து குன்றத் தொடங்கிவிட்டது.

இவ்வாறு கூறினார் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஓய்வுபெற்ற அதிபர் கலாநிதி காரை. செ சுந்தரம்பிள்ளை.

அச்சுவேலி மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டு மலர் வெளியீட்டு விழாவில் ஆய்வுரை நிகழ்த்திய கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை மேலும் பேசுகையில் நூற்றாண்டு விழா மலரை படித்த போது கிறிஸ்தவ மிஷனரிமாரின் அர்ப்பணிப்போடு கூடிய சேவையை மேலும் அறிந்துகொள்ள வாய்ப்புக் கிடைத்தது.

கிறிஸ்தவ மிஷனரிமாரால் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி 8 ஆம் வகுப்புவரை உள்ள பாடசாலையாக செயற்பட்ட வேளையில்அதிபராகக்கடமையாற்றியவர் எம். ஏ பட்டதாரி ஒருவர். இந்த கல்வித் தகைமை மூலம் கல்லூரியின் அப்போதைய தரத்தை மதிப்பீடு செய்ய முடிகின்றது — என்றார்.

கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெற்ற விழாவில் கோப்பாய் பிரதேச செயலர் சு கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது யாழ் மாவட்ட மாணவர்களின் கல்வித்தரம் குறைவடைந்து கொண்டு செல்லும் அதே வேளையில் தொழில்நுட்ப அறிவுத்திறன் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது கவலை அளிக்கின்றது என்றார்.

மாணவர்கள் தமது கல்வித் தரத்தை வளர்த்துக்கொள்வதோடு தொழில்நுட்பக் கல்வியிலும் ஆங்கிலக் கல்வியிலும் கூடிய கவனம் செலுத்தி புத்தாயிரமாம் ஆண்டுச் சவால்களை எதிர்கொள்ள வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார். (இ-11)

## நாளை

கார்த்திகை 23

வியாழக்கிழமை

திதி: பிரதமை காலை 6.32 வரை

நட்சத்திரம்: மூலம் நள்ளிரவு 12.10 வரை.

சுபநேரம்: 7.48 – 9.18

ராகுகாலம்: 1.48 – 3 18

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதய வாக்கு

எல்லோரும் கொடை வள்ளலாகி விட்டால் பூமியே சொர்க்கமாகிவிடும்நரகம் என்பது கட்டுக் கதையாகி விடும்.

— கால்டன்

## வாராந்த நிகழ்வு

கொழும்புத்துறை, டிசெ. 8

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணிக்கு ''நாமே நடவீர்'' என்ற தலைப்பில் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆசிரிய மாணவன் எஸ். லலீசன் உரைநிகழ்த்துவார்.

பேரவையின் தலைவர் சு. திருப்பரங்கிரிநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் அறிமுக உரையைப் பலாலி ஆசிரிய கலாசாலையின் பிரதி அதிபர் சிவத்தமிழ் வித்தகர் எஸ் சிவமகாலிங்கம் வழங்குவார்.

நண்பகல் 12, 30 மணிக்கு அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். (க-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி ஊழியருக்கு வருடாந்த இடமாற்றம்

வடமராட்சி, டிசெ 8

வடக்கு—கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட தரங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான 2000 ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றப்பட்டியல் வடக்கு—கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் அந்தந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சிறாப்பர், ஆங்கில, தமிழ், தட்டெழுத்தாளர், கணக்குப்பதியுநர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், எழுதுநர் ஆகியோருக்கான இடமாற்றப்பட்டியலே அனுப்பப்பட்டுள்ளது.

இதற்கமைய சாவகச்சேரி நகரசபையில் கடமையாற்றும் ஆறு எழுதுநர்கள், இரண்டு தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், சிறாப்பர், தமிழ் தட்டெழுத்தாளர், நூலகர் ஆகியோருக்கு யாழ். மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

எழுதுநர்களான திருமதி நா. அருமைநாயகம், திருமதி கு. ஆறுமுகம், சிறாப்பர் கு. உதயகுமாரன், நூலகர் ந. வித்தியானந்தன் ஆகியோர் யாழ் மாநகரசபைக்கு—

தொழில்நுட்ப உத்தியோகத்தர் சி. சிவனேசராசா எழுதுநர்களான க. ஜெயானந்தன், தா. சி. சுப்பிரமணியம் ஆகியோர் வலி. கிழக்கு பிரதேச சபைக்கும்—

தமிழ் தட்டெழுத்தாளர் சி. இரகுநாதன் வலி தென் மேற்கு பிரதேச சபைக்கும்—

எழுதுநர் ச. சுப்பையா சாவகச்சேரி பிரதேச சபைக்கும் —

தொழில்நுட்ப உத்தியோகத்தர் ந கேதீஸ்வரன் பளைப் பிரதேச சபைக்கும்— இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இடமாற்றம் செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் இதே தர உத்தியோகத்தர்கள் சாவகச்சேரி நகர சபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

(ஐ-117-185)

## தகுதிகாண் பயிலுநர் ஆசிரியர் 6 வருடகாலத்துக்குள் பயிற்சி

யாழ்ப்பாணம், டிசெ, 8

தகுதிகாண் பயிலுநர் ஆசிரியர் நியமனம் பெறுபவர்கள் ஆறு வருட காலத்துக்குள் தமது பயிற்சியைப் பூர்த்தி செய்துகொள்ளலாம் என கல்விஉயர்கல்விஅமைச்சு அறிவித்துள்ளது.

இதுவரை காலமும் மேற்படி நியமனம் பெறுபவர்கள் நான்கு வருடத்துக்குள் பயிற்சியைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருந்தனர்.

1995 ஆம் ஆண்டு தகுதிகாண் ஆசிரியர் நியமனம் பெற்ற சுமார் 250 பேர் கோப்பாய், பலாலி ஆசிரிய கலாசாலைகளில் நிலவும் இடப்பற்றாக்குறை காரணமாக பயிற்சிநெறிகளுக்கு இணைத்துக் கொள்ளப்படவில்லை.

எனவே இவர்கள் தமது தகுதிகாண் காலம் முடிவடைகின்ற போதிலும், பயிற்சியினைப்பெற முடியாத நிலையை எதிர்நோக்கினர். இவ்விடயம் குறித்து சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் யாழ் மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா விடம் பிரஸ்தாபித்ததைத்தொடர்ந்து இந்தச் சலுகை வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## துர்க்காதுரந்தரி பவள விழா நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், டிசெ. 8

சிவத்தமிழ்ச் செல்வி துர்க்காதுரந்தரி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் பவளவிழாநிகழ்வுகள் அடுத்த மாதம் 12 ஆம் திகதி யூனியன் கல்லூரியின்புதிய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இது தொடர்பாக ஆராய்வதற்காக யூனியன் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் விசேட கூட்டம் ஒன்று கடந்த மாத இறுதியில் கல்லூரியில் நடைபெற்றது சிவத்தமிழ்ச் செல்வி இந்தக் கல்லூரியில் ஆசிரியையாகப் பணிபுரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பழைய மாணவர் சங்கத் தலைவர் சி. விக்னராஜா தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பவள விழா குறித்த ஏற்பாடுகளைக் கவனிக்கவென கல்லூரி அதிபர் தலைமையில் மூவர் குழு ஒன்று நியமிக்கப்பட்டது

இதேவேளை—

சிவத்தமிழ்ச் செல்வியின் 75ஆவதுபிறந்ததினம் அடுத்த மாதம் 7 ஆம் திகதி ஆகும். அன்றைய தினம் துர்க்கை அம்மன் ஆலயத்தில் பவள விழா நடைபெறும். அடுத்த நாள்எட்டாம் திகதி நல்லூரில் உள்ள துர்க்காமணிமண்டபத்தில் விசேட பூசைகளுடன் வாழ்த்து விழா நடைபெறும்.

(இ—7)

## பயணப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டோரின் விவரம்

யாழ்ப்பாணம், டிசெ 8

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி இடங்களுக்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் — உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம் 7 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:

சங்கானை

(125040ஏ), (125046ஏ), (125211ஏ), (125211பி), (225211சி), (127018ஏ), (127220ஏ), (127485ஏ),

நெடுந்தீவு

(12208ஏ), (12208பி), (12467ஏ), (12467பி), (12467சி), )12467டி), (12556ஏ),

யாழ்ப்பாணம்

(126592ஏ) (126592பி), (126592சி), (126665ஏ), (126737ஏ), (126737பி), (126744ஏ), (126744பி), (126744சி), (126791ஏ), (126791பி), (126825ஏ), (126825பி), (126825சி), (126851ஏ), (126851பி), (126869ஏ), (126912ஏ), (126945ஏ), (126953ஏ), (126960ஏ), (126963ஏ), (126971ஏ), (126975ஏ), (127009ஏ), (133318ஏ), (133318பி), (133319ஏ), (133331ஏ), (133334ஏ), (133334பி), (1333347ஏ), (133360ஏ), (133380ஏ), (133432ஏ), (133432பி), (133439ஏ), (133440ஏ), (133447ஏ), (133447பி), (133471ஏ), (133507ஏ),

ஊர்காவற்றுறை

(11117ஏ), (11117பி), (12496ஏ), (12505ஏ), (12505பி), (12505சி), (12505டி), (12505ஈ), (12505எவ்), (12506ஏ), (12508ஏ), (12510ஏ), (12550ஏ), (12550பி), (12550சி), (12550டி), (12550ஈ).

நல்லூர்

(126703ஏ), (126842ஏ), (126902ஏ), (123607ஏ), (125033ஏ), (125033பி), (125141ஏ), (125141பி), (125254ஏ), (125254பி), (127325ஏ), (127325பி), (127405ஏ), (127482ஏ), (127482பி),

பருத்தித்துறை

(132783ஏ,)

சண்டிலிப்பாய்

(125122ஏ), (125122பி), (125122சி), (127058ஏ), (127263ஏ), (127345ஏ), (127345பி), (127474ஏ),

தெல்லிப்பழை

(121557ஏ), (121558ஏ), (121558பி), (127066ஏ), (127467ஏ), (127467பி),

உடுவில்

(121596 ஏ), (121596 பி), (123385 ஏ), (123385பி), (123385 சி), (123385 டி), (125242 ஏ), (125403 ஏ), (125403 பி), (127231 ஏ), (127266 ஏ), (127353 ஏ), (127424 ஏ), (127424பி), (127424 சி), (127460ஏ).

வேலணை

(12501ஏ), (12502ஏ), (12515ஏ), (12515பி), (12517ஏ), (12517பி), (12517சி), (12520ஏ), (12531ஏ), (12534ஏ), (12538ஏ), (12541ஏ), (12545ஏ), (12547ஏ), (12548ஏ), (12552ஏ), (12552பி), (12565ஏ),

## எலிகளால் பயிர்கள் நாசம்

தென்மராட்சி, டிசெ. 8

தென்மராட்சிப் பிரதேச நெல் வயல்களில் உள்ள பயிர்களை எலிகள் நாசம் செய்வதாக நெற்செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (க-117)

## எரிபொருள் நிலையத்துக்கு மின்சாரம்

அரியாலை, டிசெ. 8

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின்முற்றவெளிப் பகுதியில் அமைந்திருக்கும் எரிபொருள் விற்பனை நிலையத்துக்கு மின்சாரம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது டீசல் பம்புக்கு மின்சாரம் வழங்குவதற்கான இணைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சங்கத்தின் கிளைகளுக்கும் மற்றும் பாவனையாளர்களுக்கும்மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருவதால் மண்ணெண்ணெய்க்கு தனியான மீற்றர் பம்புஒன்றைப் போட்டுத் தருமாறு சங்கத்தலைவர் சீ.வீ கே. சிவஞானம் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன யாழ்.பிராந்திய அலுவலகத்தைக் கேட்டுள்ளார்.

மண்ணெண்ணெய்விநியோகத்தை மேற் கொள்வதற்கு ஊழியர்கள் சிரமப்படுவதால் மின்சாரத்தில் இயங்கும் மீற்றர் பம்ப் ஒன்றையும் அமைத்துத் தருமாறும் அவர் மேலும் கோரியுள்ளார். (க-17)

## வாசகர் திருமுகம்

### வீதியின் அவல நிலை

வாகனப் போக்குவரத்துக்களும் மற்றும் பாடசாலை செல்லும் மாணவ மாணவிகளும் விமானப் பயணத்துக்குச் செல்கின்ற பிரயாணிகளும் பிரதானமாகப் பயன்படுத்துகின்ற மாட்டின்வீதி குண்டுங் குழியுமாகப் பாழடைந்த நிலையில் காணப்படுகின்றது. இந்த வீதிஇன்னமும் ஏன்தான் திருத்தப்படாது கவனிப்பாரற்றுக் கிடக்கின்றதோ தெரியவில்லை. சகல மக்களும் பயன்படுத்துகின்ற மாட்டின் வீதி மாநகரசபையைச் சேர்ந்ததோ இல்லையோ என்று எண்ணவேண்டியுள்ளது.

இதைவிடப் பயன்பாடு குறைந்த வேறு பல வீதிகள் திருத்தம் செய்யப்பட்டு விட்டன. ஆனால் மாட்டின் வீதி மாத்திரம் ஏனோதானோ என்று ஒதுக்கப்படுவதன் மர்மம் புரியவில்லை. கூடிய விரைவில் இந்த வீதி திருத்தஞ் செய்யப்படாவிட்டால் மழை காலத்தில் இவ் வீதி மேலும் பாழடைந்த நிலைக்குத் தள்ளப்பட்டு விடும்.

போக்குவரத்துச் சாலைகளைத் திருத்தஞ் செய்யும் பகுதியினருக்கு இது சமர்ப்பணம்.

எம். வி ராஜா.

யாழ்ப்பாணம்.

### ஆசிரியர் ஆள்சேர்ப்புக்கு வயது எல்லையை உயர்த்துக

ஜி சீ ஈ. உயர்தரப் பரீட்சைப் புள்ளி அடிப்படையில் தகுதிகாண் ஆசிரியர்களை ஆள்சேர்ப்பதற்கு கோரப்பட்ட விண்ணப்ப முடிவு திகதி பற்றி யாழ். அரச அதிபர் காரணங்கள் காட்டி நீடிக்கக் கோரியது மிகவும் பொருத்தமானதும் வேண்டப்படுவதுமாகும்.

அது பற்றிய தகவல்கள் யாழ்ப்பாணத்துக்கு மிகக் குறுகிய காலத்திலேயே கிடைத்தன. முழுத் தகவல்களும் உரிய காலத்தினுள் பலரால் அறிய முடியவில்லை.

அடுத்ததாக வயது எல்லை பற்றிய பிரச்சினையாகும். இதுவரை அரசாங்கமோ கல்விப் பகுதியோ கோரிய விண்ணப்பங்களுக்குரிய கூடிய வயதெல்லை 45 ஆகும். ஆயினும் இதற்கு 30 வயதே காட்டப்பட்டுள்ளது. அகதிகளாகவும் இடம்பெயர்ந்தும் அலைந்த எம் போன்ற பலர் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே எழுதுவினைஞர், தட்டச்சு, சுருக்கெழுத்து, கைப்பணி, சித்திர ஆசிரியர் போன்றோர் விண்ணப்பத்திற்கு விதித்தவாறு வயதெல்லையை இதற்கும் 45 வரை உயர்த்தி வேலையற்று அகதிகளாய் வருந்தும் எம் போன்றவர்க்கு உதவுமாறும் பணிவுடன் வேண்டுகிறோம்.

க. சிவபாலன்

பாதிக்கப்பட்டோர் சார்பில்.

### வீதி ஒழுங்கு பேணுவது பற்றி...

உதயன் பத்திரிகையில் கடந்த 16 - 11 - 99 அன்று 5ஆம் பக்கத்தில் வாசகர் திருமுகம் பகுதியில் ''போக்குவரத்து விதிமுறைகளைப் போதிக்க வேண்டும்'' என்ற தலைப்பின் கீழ் ஓர் அன்பரும் ''வீதி ஒழுங்குகள் பற்றி மாணவருக்குப் போதிக்க அதிபருக்கு ஆலோசனை'' என்ற தலைப்பில் 8 ஆம் பக்கத்திலும் விடயங்கள் மக்கள் முன் வைக்கப்பட்டுள்ளன. வடபிராந்திய போக்குவரத்துச் சபை முகாமையாளராகிய யான் குடாநாட்டில் இடம்பெற்ற விபத்துக்களை அவதானித்து தீர்க்க தரிசனத்துடன் கடந்த ஆண்டில் இருந்து கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகள், அதிபர்கள் ஆகியோருடன் தொடர்பு கொண்டு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பல கல்லூரிகளில் போக்குவரத்து விதி முறைகள் யாவை? அவற்றை வாகனங்களை ஓட்டும் சாரதிகள், மோட்டார் சைக்கிள் பாவனையாளர்கள், துவிச்சக்கரவண்டி பாவனையாளர்கள் முக்கியமாக கல்லூரி மாணவ மாணவிகள், இப் போக்குவரத்து விதிகளை ஏன் கடைப்பிடிக்க வேண்டும்? போக்குவரத்து விதி முறைகளைக் கடைப்பிடிப்பதனால் ஏற்படும் பயன்கள் பற்றி போக்குவரத்து விதி முறைத் துறையில், நிபுணத்துவமுள்ள எமது சாரதிப் பயிற்சிப் பாடசாலையைச் சேர்ந்த உத்தியோகத்தர் மூலம் பல கலந்துரையாடல்களை நடத்தியுள்ளோம். சம்பந்தப்பட்ட கல்லூரிகளின் அதிபர்கள் கலந்துரையாடல்கள் பற்றி பூரண திருப்தி தெரிவித்துள்ளார்கள்.

கல்விப் பணிப்பாளர் வி. இராசையா அவர்கள் அதிபர்களுக்கு இவ் விடயம் சம்பந்தமாக ஆலோசனை வழங்கியதைக் கருத்தில் கொண்டு ''வ.பி போ. சபையின் போக்குவரத்து விதிகளும் அவற்றைப் பேணுதலும்'' என்ற துறையில் நிபுணத்துவம் பெற்ற எமது அதிகாரிகளைக் கொண்டு தத்தம் கல்லூரிகளில் இத்தகைய கலந்துரையாடல்களை வைக்க விரும்பும் அதிபர்கள் தயவு செய்து எம்முடன் தொடர்பு கொண்டால் இன்றைய சமூகத்திற்கு தேவையான மிக அத்தியாவசியமான இச் சேவையை வழங்க நாம் தயாராகவுள்ளோம் என்பதனை யாவருக்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

குடாநாட்டின் இன்றைய தேவைகளை உணர்ந்து இதனை முன்னெடுத்த கல்விப்பணிப்பாளர் திரு. வி. இராசையா அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எனது இவ் வேண்டுகோளை ஏற்று யாவரும் பயன்பெற வேண்டும். வீதிவிபத்துக்கள் குறைய வேண்டும். மனித உயிர்கள் காக்கப்பட வேண்டும். மனிதர்களின் அவயவங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

வ. பி. போ. சபை — பொதுமுகாமையாளர்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பெருமாளை...

(முதலாம் பக்கத் தொடர்)

எமது கட்சிக்குள் தோன்றியுள்ள பிரச்சினையை தோழர்கள் மத்தியில் உள்ள முரண்பாடுகளை, கடந்த காங்கிரசில் தெரிவு செய்யப்பட்ட கட்சி உறுப்புக்களை கூட்டி ஆராய்ந்து தீர்ப்பதற்கு முற்சிக்காமல் பத்திரிகைகளுக்கு அறிக்கை கொடுத்திருப்பது எமக்கு பெருத்த ஏமாற்றத்தை தருகிறது. இதன் மூலம் கட்சிக்கு களங்கத்தை ஏற்படுத்தியிருப்பது எமக்கு விசனத்தையே ஏற்படுத்துகிறது. கட்சிக்குள் எமது அபிப்பிராயங்களை தெரிவிப்பதற்கான சந்தர்ப்பத்தினை வழங்காமல் பத்திரிகைகளில் பகிரங்கப்படுத்தப் பட்டிருப்பதனால் நாமும் இது தொடர்பான எமது அபிப்பிராயங்களை வெளியிட நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறோம்.

மத்திய கமிட்டி உறுப்பினரும், அரசியல் பீட உறுப்பினருமான தோழர் வரதராஜப்பெருமாள் அவர்களை கட்சியிலிருந்து இடைநிறுத்துவதாக கட்சிக்குள் அறிவிக்காமலும், கட்சி அமைப்புக்களுக்குள் அவர் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்கள் பற்றி அவரிடம் விளக்கம் கோராமலும் மத்திய கமிட்டியில் அவர் தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை முன்வைத்து விமர்சிக்காமலும் பத்திரிகைகளுக்கு அறிவித்திருப்பது எமது கட்சியின் நடைமுறைகளுக்குப் புறம்பானதாகும்.

தோழர் வரதராஜப்பெருமாள் அவர்கள் இறுதியாக இடம்பெற்ற மத்திய கமிட்டி கூட்டத்தில் செயலாளர் நாயகத்தின் மீது முன்வைத்த விமர்சனங்களுக்காக பழிவாங்கப் பட்டிருப்பதாகவே நாம் கருதுகிறோம். எமது கட்சியின் செயலாளர் நாயகத்துக்கு கட்சியின் நலனை பாதுகாப்பதற்காக எம்மால் (தோழர்களால்) அளிக்கப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி மத்திய கமிட்டிக்குள் தன்னை விமர்சித்த ஒருவரை இந்த கட்சிக்குள் தொடர்ந்து செயற்பட அனுமதிக்காமல் ஓரங்கட்ட நினைக்கும் நடவடிக்கை எமது கட்சியின் ஜனநாயக நடைமுறைகளுக்கு மாறானது.

கட்சிக்குள் வேலைகளிலிருந்து இடைநிறுத்தப்படும் எவர் மீதும் முறைப்படி விசாரணைகளை நடத்தாமல் குற்றங்களை சுமத்தி, அவற்றை பகிரங்கமாக வெளியிடுவது தவறாகும். செயலாளர் நாயகத்துக்கு அத்தகைய அதிகாரம் கிடையாது. இதனை முடிவுசெய்யும் அதிகாரம் மத்திய கமிட்டிக்கு மாத்திரமே உண்டு. மத்திய கமிட்டி குற்றமிழைத்துள்ளாரா என்பதை இறுதி செய்யும் முன்பாக இவற்றை பகிரங்கப் படுத்தியிருப்பது உள்நோக்கம் கொண்ட நடவடிக்கையாகும்.

எந்தக் கட்சி சட்ட விதிகளின் பிரகாரம் வரதராஜப் பெருமாள் அவர்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளார் என்று அறிவிக்கபட்டதோ அதே கட்சி யாப்பின் பிரகாரம் 3 மாதங்களுக்கு ஒரு தடவை மத்திய கமிட்டியை கூட்ட வேண்டியது கட்சிசெயலாளர் நாயகத்தின் கடமையாகும். கடந்த 18. 03 1999 இல் இறுதியாக கூட்டப்பட்ட மத்திய கமிட்டியை இன்று வரை கூட்டாமல் இவ்வாறு அறிவித்திருப்பதும் கட்சியின் கட்டுப்பாட்டை மீறிய தனிமனித செயற்பாடாகவே எமக்குத் தோன்றுகிறது.

★ கட்சியில் உள்ள தனி நபர்களின் பெயர்களின் இருக்கும் கட்சி சொத்துக்கள் கட்சியின் பெயரில் நிதியம் ஏற்படுத்தி அதற்கு மாற்றப் பட வேண்டும் எனவும்.

★ கட்சியில் நிதியை கையாளுவதற்கு புதிதாக நிதிக் கமிட்டி ஒன்றை அமைப்பது எனவும் நிதி ஆய்வுக் குழு ஒன்றை அமைத்து கடந்த காலத்தில்செலவழிக்கப்பட்ட கட்சி நிதிக்குரிய கணக்குகள் கட்சியின் அசையும் அசையா சொத்துக்களுக்குரிய ஆவணங்கள். பத்திரங்கள் அந்த நிதி ஆய்வுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும் —

★ இன்றிலிருந்து 3 மாதத்திற்குள் கட்சிக் காங்கிரஸ் கூட்டபட வேண்டும் அதற்கான ஏற்பாடுகளை கவனிக்க 3 பேர் கொண்ட ஒரு குழுவை அமைப்பது எனவும்— அவர் முன்வைத்த பிரேரணைகள் மத்தியகமிட்டியினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது 5 பேர் கொண்ட நிதிக்குழு, 3 பேர் கொண்டநிதி ஆய்வுக் குழு.3 பேர்கொண்ட காங்கிரஸ்குழு என்பனவும் அமைக்கப்பட்டது.இது ஏனைய தோழர்களாலும் கட்சியின் நலன் விரும்பிகளாலும் வரவேற்கப்பட்ட விடயங்களாகும்.

இவற்றை நடைமுறைப் படுத்துவதற்குப் பதிலாக அதனை முன்வைத்த ஒருவர் கட்சிக்குள் இடைநிறுத்தப் பட்டிருப்பது நாம் இந்தக் கட்சிக்குள் கற்றுக் கொண்ட அரசியல் நாகரிகத்திற்கு மாறானது.

எமது கட்சி சட்ட விதிகளின்படி 4 வருடங்களுக்கு ஒரு தடவை கட்சிக்காங்கிரஸ் கூட்டப்பட வேண்டும் கட்சியின் இரண்டாம் காங்கிரஸ் 1993மாசி மாதம் நடைபெற்றது.மூன்றாவது கட்சிக் காங்கிரஸ் முறைப்படி 1997 ஆம் ஆண்டில் கூட்டப்பட்டிருக்க வேண்டும். அந்தக் காங்கிரசில் புதிய மத்திய கமிட்டியும் அந்த மத்திய கமிட்டியால் புதிய செயலாளர் நாயகமும் தெரிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். அனைத்துப் பிராந்தியங்களையும் சேர்ந்த பல கட்சி உறுப்பினர்கள் செயலாளர் நாயகத்திடம் கட்சிக் காங்கிரசை நடத்தப் படாமலிருப்பதற்கு தமது அதிருப்தியை தெரிவித்துள்ள போதும் காங்கிரசை கூட்டுவதற்கு இன்றுவரை கட்சி யாப்பின்படி நடவடிக்கை எடுக்காமல் அதே யாப்பில் செயலாளர் நாயகத்திற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தை மட்டும் பிரயோகிக்க முற்பட்டிருப்பது ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாட்டிற்கு முரணானது; இது எமக்கு உடன்பாடானதில்லை.

பெரும்பான்மையான கட்சி தோழர்கள், அரசியல்பீட உறுப்பினர்கள், மத்திய கமிட்டி உறுப்பினர்களின் ஆலோசனையின்படி இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பத்திரிகைகளுக்கு தெரிவித்திருப்பதில் எவ்வித உண்மையும் இருப்பதாகத் தெரியவில்லை. யாழ். பிராந்தியத்தை சேர்ந்த ஓர் அங்கத்தவர் கூட இந்த முடிவை ஆதரிக்கவில்லை அவர்களிடம் ஆலோசனை கேட்கப்படவும் இல்லை, யாழ். பிராந்திய தோழர்கள் தோழர் வரதராஜப்பெருமாள் அவர்கள் மீது புகார் கூறியிருப்பதாக எம்மையும் இந்த ஒருதலைப்பட்சமான நடவடிக்வடிக்கைக்கு உடந்தை என காட்ட முற்பட்டிருப்பதை நாம் முற்றாக மறுக்கிறோம்.

இந்த இடைநிறுத்தம் தொடர்பாக இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் எமது கட்சி அரசியல் யாப்பின் படி செயலாளர் நாயகத்துக்கு இல்லை. இது தொடர்பாக இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் மத்திய கமிட்டிக்கு மாத்திரமே உண்டு ஆனால் மத்திய கமிட்டி உறுப்பினர்களை இடைநிறுத்தி மாற்றுக் கருத்தை நசுக்கியபின் பெயருக்கு மத்திய கமிட்டியைக் கூட்டி ஜனநாயக ரீதியில் செயற்படுவதாகக்காட்ட முற்படுவதுதவறு. எனவே யாரையும் இடைநிறுத்தம்செய்யாது மத்திய கமிட்டி கூட்டப்பட்டு பெரும்பான்மை முடிவின்படி கட்சி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் அல்லது கட்சிக் காங்கிரசைக் கூட்டி பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

எல்லா தமிழ்அரசியல்கட்சிகளும் அமைப்புக்களும் ஒற்றுமைப்பட்டுத் தமிழ் மக்களின் அபிலாசைகளுக்காகக் குரல் கொடுக்கவேண்டும் என மக்களும் கட்சித் தோழர்களும் கட்சியின் நலன் விரும்பிகளும் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் எதிர்பார்ப்புகளுடன் காத்திருக்கும் வேளையில் எமது கட்சியையே சிதைத்து சீரழிக்கும் வகையில் இடைநிறுத்துதல் கட்சியிலிருந்து வெளியேற்றுதல் போன்ற நடவடிக்கைகளில் செயலாளர் நாயகம் இறங்காமல் கட்சியின் அனைத்துத் தோழர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய கட்சி காங்கிரசை ஏற்கனவே தீர்மானித்தபடி கூட்டி கட்சியின் அனைத்து விவகாரங்கள் தொடர்பாகவும் தீர்மானிப்பதற்கு இடமளிப்பதுதான் இன்று கட்சிக்குள் தோன்றியுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கு உரிய வழிமுறையாகும். இதுவே யாழ். பிராந்தியத் தோழர்கள் அனைவரதும் ஏகமனதான தீர்மானமுமாகும் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் - கந்தையா

(இளைப்பாறிய ஆசிரியர். அளவெட்டி அருணோதயக் கல்லூரி)

அளவெட்டி வடக்கு பள்ளியவத்தையைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய வல்லிபுரம் கந்தையா [7-12-99] செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் கிருஷ்ணதாசன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், பசிலைப் பள்ளி பிரதேச சபை (பளை), விக்கினேஸ்வரதாசன் (ஜேர்மனி), குகதாசன் (கனடா), ஆகியோரின் பாசமிகு தந்தையும் பங்கயச்செல்வி, மல்லிகாதேவி (ஜேர்மனி), தோகை அம்பிகை (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், சனாதனன் (ஜேர்மன்), தனுஜா (யாழ் இந்து மகளிர் பாடசாலை-ஆண்டு11) டாறிங் ஸ்ரெபினி (ஜேர்மனி), லசாயன, விதுஅயன் (கன்டா) ஆகியோரின் ஆசைப் பேரனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (8-12-99) புதன் கிழமை பகல் 12 மணியளவில் கோண்டாவில் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் மல்லாம் பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
க. கிருஷ்ணதாசன்
(மகன்)

புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில்.

(71622)

## தேர்தலைக் கண்காணிக்க

## சர்வதேச பார்வையாளர் குழு யாழ்ப்பாணம் வருகின்றது

யாழ்ப்பாணம், டிசெ 8

இம்மாதம் 21 ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்கென சர்வதேச பார்வையாளர் குழு எதிர்வரும் 19 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளது.

வெளிநாட்டுப் பிரதிநிதி ஒருவரின் தலைமையில் நான்கு பேரடங்கிய குழுவினரே தேர்தலைக் கண்காணிக்க யாழ்ப்பாணம் வருகின்றனர்.

இந்தக் குழுவினர் இம்மாதம் 19 ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து தேர்தல் நடவடிக்கையைக் கண்காணிப்பார்கள்.

(இ-5)

## நவம்பரில் 36 முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், டிசெ.8

யாழ். மாவட்டத்தில் கடந்த நவம்பர் மாதத்தில் 36 பேர் கைது செய்யப்பட்டனர் என்ற மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது

கைது செய்யப்பட்டவர்களில் 21 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்று மனித உரிமைகள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை இந்த மாதத்தில் ஆண்கள் காணாமல் போனது தொடர்பாக பத்து முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன் பின்னர் இவர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக கடந்த மாதத்தில் 51 முறைப்பாடுகள் கிடைத்தன என்றும் இவற்றில் 49 முறைப்பாடுகள் தீர்த்து வைக்கப்பட்டன என்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு மாவட்ட இணைப்பாளர் எஸ். சிறீதரன் தெரிவித்தார்.

(இ-5)

## வாக்களிப்பு நிலையங்கள்

வலி.தென்மேற்கு, டிசெ. 8

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு மானிப்பாய் தொகுதியில் மட்டும் 45 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

## வீதி திறப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 8

சங்கானை குளத்தடி வீதி புனரமைக்கப்பட்டு இன்று பிற்பகல் 3-00 மணிக்கு வலி. மேற்குப் பிரதேச சபைத் தலைவர் என். திரிலோகநாதனால் திறந்து வைக்கப்பட இருக்கின்றது.

இந்த வீதிக்கு பிரதேசசபையின் முன்னாள் செயலாளர் க. திரவியத்தின் பெயர் சூட்டும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ஐ-3)

### காணாமற்...

[இரண்டாம் பக்கத்தொடர்]

டம் தெரிவித்தனர்.

பாதுகாப்பு அமைச்சு முன்பு மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே அந்தக் கடிதங்கள் அனுப்பப் பட்டன என்றும்—

திணைக்களம் மேற்கொண்ட விசாரணைகள் இன்னமும் முடியவில்லை என்றும்—

அந்த விசாரணைகளின் முடிவிலேயே உண்மையான விவரங்கள் வெளியிடப்படும் என்றும்— கோத்தாக்கொட தெரிவித்தார். [இ-3]

### வன்னிக்கு...

[முதலாம் பக்கத் தொடர்]

குளத்திலும் —

புலிகளின் முன்னரங்க நிலையான பெரியபண்டி விரிச்சானிலும் —

இந்தப்பணி இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது

பிரமனாலங்குளத்துக்கும் பெரியபண்டி விரிச்சானுக்கும் இடைப்பட்ட ஐந்து கிலோ மீற்றர் நீளமான பிரதேசம் பொதுமக்கள் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது என்றும் —

போக்குவரத்து இடம் பெறும் நேரங்களில் செஞ்சிலுவைச்சர்வதேசக்குழு அதிகாரிகள் அங்கு பணியில ஈடுபடுவர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

அரிசி, பருப்பு, சீனி. எரிபொருள் ஆகியன கொண்ட 700 மெற்றிக்தொன் பொருள்களை உடனடியாக அனுப்பி வைக்க ஏற்பாடாகி இருப்பதாகவும் —

ஓரிரு தினங்களில் புதிய பாதை ஊடாக அவை அங்கு அனுப்பி வைக்கப்படும் என்றும்—

அரச தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உணவு விநியோகம் தொடர்பாக செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு ஊடாக விடுதலைப் புலிகளின் இணக்கம் பெறப்பட்டிருப்பதாக இராணுவப் பேச்சாளர் சுனில் தென்னக்கோன் தெரிவித்தார். (ஐ-க-3)


யாழ். குடாநாட்டு மக்களின் நன்மை கருதி

நவீன சத்திரசிகிச்சை வசதிகளுடன்

YARL HOSPITAL

★ காது, மூக்கு, தொண்டை
★ கண்
★ பொது
★ பல்
] சத்திர சிகிச்சைகளும் நிபுணத்துவ ஆலோசனைகளும்

★ தோல் வைத்திய நிபுணர்கள், குழந்தை வைத்திய நிபுணர்கள் ஆலோசனையும் சிகிச்சையும்
★ WARD வசதி மற்றும் ஆய்வுகூட வசதிகள்
★ MBBS வைத்தியரின் இரவு — பகல் வெளி நோயாளர் பிரிவு சிகிச்சை
★ பெண்ணோயியல் (V.O.G) மற்றும் மகப்பேற்றியல் வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகள், மகப்பேற்று அறுவைச் சிகிச்சைகள்

யாழ் வைத்தியசாலை

(ஆலடிச் சந்திக்கும் கந்தர்மடம் சந்திக்கும் இடையில்)

284, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(சி/10140)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடாநாட்டில்...
(முதலாம் பக்கத் தொடர்)
பட்ட பூர்வாங்கப் பரிசோதனைகளின் போது எய்ட்ஸ் நோயாளியாக இனங்காணப்பட்டிருக்கிறார்.

யாழ். ஆஸ்பத்திரியில் மேற்கொள்ளப்பட்ட இரத்தப் பரிசோதனை மூலம் இது உறுதி செய்யப்பட்டிருப்பதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

குடாநாட்டில் எய்ட்ஸ்நோய் அறிகுறியுடன் இனங்காணப்பட்ட முதலாவது பெண் இவராவார்.

இவரது கணவர் கடந்த சுமார் 10 ஆண்டு காலமாக கொழும்பில் லொட்ஜ் ஒன்றை நடத்தி வந்தவர் என்றும் கடந்த ஆண்டு கடும் நிமோனியா காய்ச்சல் ஏற்பட்டு கொழும்பு மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டு மரணமானார் எனவும்—தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# வளம் மிக்க நாடு அழிந்தமைக்கு காரணம் இரு பிரதான கட்சிகளே!

## ஜே. வி. பி. செயலர் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, டிசெ. 8

கடந்த 50 வருடங்களுக்கு மேலாக இந்த நாட்டை ஆட்சிசெய்த இரு பிரதான அரசியல் கட்சிகளும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத் தவறியதாலேயே வளம்மிக்க இந்தநாடு இன்று குட்டிச் சுவராக மாறியுள்ளது.

மட்டக்களப்பு காத்தான் குடியில் நடைபெற்ற ஜே. வி. பியின் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையில் கட்சியின் பொதுச் செயலாளர் விமர் வீரசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

17 வருடங்கள் தொடர்ந்து ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக்கட்சி இந்த நாட்டின் தேசியப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணத் தவறிவிட்டது. தற்போது பதவியிலுள்ள பொதுஜன முன்னணியும்கூட இதனை தீர்க்கவில்லை. இந்த இரு கட்சிகளுமே எதிர்காலத்தில் இந்தப் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வைக் காணப் போவதில்லை.

ஜே. வி பி. பதவிக்கு வருமானால் இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வை அரசியல் நோக்கம் இன்றி தேசிய அடிப்படையை நோக்கமாகக் கொண்டு முடிவுக்கு கொண்டு வரும்.

இன்றைய அரசு யுத்தத்தைச் சாதகமாகப் பயன்படுத்தி தொழிற்சங்கங்கள் மாணவர்கள் உரிமைகளைப் பறிக்க முனைகிறது. இப்படி அவர் கூறினார். (-3-8)

### குறுகிய கால கணனிப் பயிற்சி

யாழ்ப்பாணம், டிசெ. 8

யாழ். கல்விவலயத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு குறுகியகால கணனிப் பயிற்சி நெறி கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பகுதி பகுதியாக நடைபெறவுள்ள மேற்படி பயிற்சி நெறியை ஐ. நா. அபிவிருத்தித்திட்ட அனுசரணையுடன் யாழ். மாவட்ட செயலகத்தைச் சேர்ந்த கணனிப் பயிற்சி நெறி பயிற்றுவிக்கும் உத்தியோகத்தர்களே மேற்கொண்டு வருகின்றார்கள்.

இந்தப்பயிற்சி நெறிக்கென கல்விவலயத்தில் உள்ள கணனிகளே பயன்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த பல மாதங்களாக இங்குள்ள கணனிகள் பயன்படுத்தாதிருந்ததும் பயிற்சி வழங்குவதற்குரிய பயிற்றுவிப்பாளர் ஒருவர் இல்லாது இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. [க-10]

சிவில...
(முதலாம் பக்கத் தொடர்)
ரம் வருமாறு:

★ மன்னார் — பிரிகேடியர் ஐஸ்டின் அல்விஸ்
✶ வவுனியா— பிரிகேடியர் கே. பியசோமா
✶ திருமலை — கொமாடோர் சுனில் ரஞ்சன் சமரதுங்க
★ மட்டக்களப்பு — பிரிகேடியர் திஸ்ஸ அபயரத்ன
✶ அம்பாறை — சிரேஷ்ட பொலீஸ் அதிபர் ஈ. டி. பிரேமரத்ன

◆ அந்த மாவட்டங்களில் இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்தல்.
◆ இடம்பெயர்ந்த மக்களுக்கு குடியிருப்பு வசதிகளைச் செய்தல்.
◆ போதிய உணவுப் பொருள்களைக் கையிருப்பில் வைத்திருப்பதுடன் உரிய விநியோகம் இடம்பெறுவதை உறுதி செய்தல்.
◆ குடிதண்ணீர், மருந்து, மின்சாரம் விநியோகம் மற்றும் போக்குவரத்தை உறுதி செய்தல்—

ஆகிய பணிகளை இவர்கள் விசேடமாக மேற்கொள்வர். [ஐ-3]


MODERN LONDON STAR
Bank View
Chavakachcheri

எமது பயிற்சி நிறுவனம் தரம் 7 முதல் O/L வரையுமான வகுப்புக்களையும் கணனி பயிற்சியையும் மேற்கொண்டு வருகிறது. மேற்படி கற்கை நெறிகளின் அடிப்படையில் உயர்ந்த மாணவர்களுக்காக இரண்டு விருதுகள் வழங்கப்படுகிறது

[ சிறந்த பெற்றோர் விருது-1999 ]
திரு. தருமதி S. தேவானந்தன்

[ சிறந்த மாணவர் விருது-1999 ]
S. சிவசங்கரி, T. சதீஸ்குமார். M. இராகுலன்
V. கோகுலன் M. நடனதேவன் T. கோகுலவதனன்
V. சாரங்கன் S நிஷாந்தினி

குறிப்பு: 2000 ஆம் ஆண்டில் விஞ்ஞான ஆய்வுகூட வசதி அளிக்கப்படுகிறது.

★ புதிய அனுமதிகளை விரைந்து பெறவும் (30 மாணவர் மட்டும்)

(71586) — நிர்வாகி



Institute of Informatics Studies

5000 மாணவர்களுக்கான மாபெரும் புலமைப் பரிசில் திட்டம்

பெற்றோர்களே!

இன்றைய கணனி யுகத்தில் உங்கள் பிள்ளைகளுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுப்பது உங்கள் பொறுப்பாகும். அந்த வகையில் நீங்கள் உங்கள் கடமையைச் சரிவரச் செய்ய என்ன செய்யவேண்டும் என்பது உங்கள் முன் கேள்விக் குறியாக நிற்கின்றதா?

"கவலைப்படாதீர்கள்"

IIS உங்களுக்கு வழிகாட்டுகின்றது

உங்கள் பிள்ளைகளின் வளமான எதிர்காலத்திற்கு உத்தரவாதமளிக்கின்றது. இதற்கு நீங்கள் செய்ய வேண்டியது என்ன? IIS இன் கணனிக் கல்விக்கான மாபெரும் புலமைப் பரிசில் திட்டத்தில் உங்கள் பிள்ளைகளையும் இணைத்து விடுவதே.

★ சந்தர்ப்பத்தினைத் தவறவிடாதீர்கள்!
"இன்னும் ஏழு நாள்கள் மட்டுமே உள்ளன"
உங்கள் தீர்க்கமான முடிவிலேயே உங்கள் பிள்ளைகளின் வளமான எதிர்காலம் என்பதை மறந்து விடாதீர்கள்.

★ கடந்த ஆண்டுகளில் பல ஆயிரக்கணக்கான மாணவர்கள் இப் புலமைப் பரிசில் திட்டத்தின் மூலம் பயன் பெற்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

— இயக்குநர்

100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 2831 (சி/10138)



இன்றைய ஓடியோ CD வெளியீடு!
S A. ராஜ்குமாரின் இசையில்
வானத்தைப் போல
திருப்பதி ஏழு மலை வெங்கடேசா
மூர்த்தி வீடியோ சென்ரர்
மானிப்பாய்.
T. P. - 2884
[சி/10139]



ஷண்
கமலின் ஹேராம் உட்பட பல போஸ்ரர்கள் வந்துவிட்டன. விற்பனை விறுவிறுப்பாக நடைபெறுகிறது. வாங்கிச் செல்லுங்கள்.
ஷண் றெக்கோடிங் ஸ்ரொட்
பெரியகடை, யாழ்ப்பாணம்.
[71624]



சயன்ஸ் அக்கடமி
நல்லூர்.
ரூபா அக்கடமி
அரியாலை.
தரம் 3 – O/L வரை
எமது அக்கடமி மாணவரும் புதியமாணவரும் நாளை பி. ப. 3. 30 மணிக்கு சமூகம் தரவும்.
(அனுமதிப் பத்திரம், அனுமதி அட்டை, அடையாள அட்டை, நேரசூசிகை, கோவை, கணிப்பீட்டு அறிக்கை, வரவேடு என்பன வழங்கப்படும்).
"உங்கள் 2000 விளக்கு"
(71602)


மீளக் குடியமர்ந்த மக்களுக்கான

## விவசாயச் செய்கை பற்றிய இருநாள் பயிற்சிப் பட்டறை

வலி. கிழக்கு, டிசெ 8

யாழ். மாவட்டத்தில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கான விவசாய செயற்படுத்தும் திட்டம் தொடர்பான இருநாள் பயிற்சிப் பட்டறை ஒன்று கடந்த 3 ஆம், 4ஆம் திகதிகளில் திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

உலக உணவு ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட இந்தப் பயிற்சிப்பட்டறையில் யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலர்கள், திட்டமிடல் பணிப்பாளர்கள், திணைக்களத் தலைவர் ஆகியோர் கலந்துகொண்டனர்—

இப்பயிற்சிப் பட்டறையில் வடக்கு—கிழக்கு மாகாண விவசாயத் திணைக்கள ஆணையாளர் எஸ். பெரியசாமி, விசேட அடையாள அட்டை நுண்கருத்திட்ட ஆணையாளர் எஸ் திருலிங்கநாதன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

மீளக் குடியமர்ந்த மக்கள் விவசாயம் செய்வதில் உள்ள பிரச்சினைகள், பொருள்களைச் சந்தைப்படுத்தல் தொடர்பான பிரச்சினைகள், விவசாய சிறுகைத்தொழில் நிலையம் இல்லாமை போன்ற விடயங்களும் இப் பயிற்சிப் பட்டறையில் ஆராயப்பட்டதுடன் இனி வரும் காலங்களில் விவசாயம் செய்யும் விவசாயிகளின் சகல பிரச்சினைகளும் ஆராயப்பட்டு ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. (ஐ-180)

ஆர்ப்பாட்டம்..
(முதலாம் பக்கத் தொடர்)
கள் நேற்றுக் காலை நாடாளுமன்றத்துக்கு முன்னால் உள்ள முச்சந்தியில் ஆர்ப்பாட்டம்ஒன்றை மேற்கொண்டனர்.

அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆதரவு தெரிவித்து ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவி சிறிமானி அத்துலத் முதலி, ஈ. பி. டி. பியைச் சேர்ந்த எஸ். சிவதாசன் ஆகியோரும் இதில் பங்கு பற்றினர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

போராட்டம் முடிவடைந்த பின்னர் அவர்கள் ஊர்வலமாக நாடாளுமன்றத்துக்குச் சென்றனர். (ஐ-க-3)

சந்திரசேகரன்...
(முதலாம் பக்கத் தொடர்)
அந்த மாநாட்டில் அவர் தெரிவித்ததாவது:

1994 ஆம் ஆண்டு அரசில் இணைந்தது முதல் 3 ஆம் தரப்பு மத்தியஸ்தத்துடன் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தும்படி ஜனாதிபதியை வற்புறுத்தி வந்தோம். ஆனால் இன்றுவரை எதுவும் நடக்கவில்லை. எமது இந்தக் கோரிக்கையை ஐ.தே.க. தற்போது ஏற்றுள்ளது. எனவே அந்தக்கட்சிக்கு ஆதரவு வழங்க முடிவு செய்துள்ளோம். தோட்டப்பகுதித் தொழிலாளர்களுக்கு நாளாந்தம் 150ரூபா சம்பளம் வழங்கவும் அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை வழங்கவும் ஐ. தே. க. இணக்கம் தெரிவித்துள்ளது என்றும் சந்திரசேகரன் தெரிவித்தார். (ஐ-3)

அவசர......
(முதலாம் பக்கத் தொடர்)
உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

பிரேரணைக்கு எதிராக ஏன் வாக்களித்தீர்கள்? என்று ஈ. பி. டி. பி: உறுப்பினர்களிடம் அமைச்சர்களான ரிச்சர்ட் பத்திரனவும், ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயும் வினவினர்.

''தனிப்பட்ட ரீதியில் இந்த முடிவை எடுத்தோம்; சொந்தப்பிரச்சினை காரணம்' என்று அவர்கள் பதில்அளித்தனர் என்று தெரியவருகிறது

கடந்த நான்கு ஆண்டுகளாகப் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்கு ஆதரவளித்துவரும் ஈ. பி. டி. பி. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவசர காலச் சட்டத்துக்கு ஆதரவாக நாடாளுமன்றில் தொடர்ந்து வாக்களித்து வருகின்றனர். அந்த அமைப்பைச் சேர்ந்த இரு உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களித்திருப்பது இதுவே முதல் முறையாகும்.

ஈ பி. டி. பி கட்சியின் மொத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை 9 ஆகும். இவர்களில் இருவர் நீதிமன்ற வழக்கின் மூலம் பதவி இழந்துள்ளனர். மற்றொருவர் அண்மையில் கொலையுண்டார்; மிகுதி ஆறு பேர் மட்டுமே நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்றனர். அவர்களில் இருவரே நேற்று அவசர காலச் சட்டத்துக்கு எதிராக வாக்களித்தனர். [ஐ-க-3-8]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08-12-1999 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org